706

...tered No. M. 1800 "NAVASAKTI"

நவசக்தி

திங்கள் வெளியீடு

... MADRAS 8-NOV 1933

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு ௧௫ 1933ஆ அக்டோபர்மீ பரல் ௧௨

உள்ளுறை

	பக்கம்
பூகோள விலாசம்	௩௱௧௧
யோபுவின் பக்தித் திறன்	௩௱௧௩
பிறர் நம்மைக் கண்ட விதம்	௩௱௨௧
சுந்தர கவிலாசம்	௩௱௨௮
சமதா சிந்தனை	௩௱௩௧
திருக்கோயில் வழிபாடும் சீர்திருத்தமும்	௩௱௩௪
இடியேறு	௩௱௪௧

வருட சந்தா

உள்நாடு ரூபா 3-8-0. வெளிநாடு ரூபா 4.

அரிய தமிழ் நூல்கள்

	ரூ.	அ.
கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்)....	3	0
முருகவேள் பனுவல் திரட்டு	1	0
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும்பத வுரையும் சரித்திரக் குறிப்பும்)	0	12
முருகன் திருவருட்பா	0	8
தேவி தோத்திர மஞ்சரி	0	4
குசேலோபாக்கியானம் (மூலமும் அரும்பத உரையும்)	1	4
விநாயகர் பனுவல் திரட்டு	0	6
திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும்		
கிளேஸ்	0	5
டெ. ரப்	0	3
சிவபுண்ணியத் தெளிவு	0	3
காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன்	0	6

திரு அருட்பா - ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு.

சுவாமிகள் கையெழுத்தைக்கொண்டு பிழை களையப்பட்ட சுத்த பாடமுள்ளது.
அதன் விஷயங்களும் ஆராய்ச்சிக் குறிப்புக்களும் நிறைந்தது.

6-வது தனிப்பாசுரப் பகுதி - அடக்கவிலை அணா 5.
(பல மத ஸ்தோத்திரங்கள் - கலியுகக் கோலம் - குடும்ப கோஷம்)

திருவாசகம் மூலமும் உரையும் விலை ரூபா 5.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

சத்தியம் விளங்க வேண்டுமா?

வெள்ளம் வருதற்கு முன்பே
அணைகோலிக் கொள்வது நல்லது

உங்களெதிர்கால நிலையைத் தெரிந்து கொண்டால் அதற்குத் தக்கபடி வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் கூடும்.

திருமணப் பொருத்த நிர்ணயம் சிறப்பாகத் தெரிந்து கொள்ளுங்கள். கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள் ; அல்லது நேரே வாருங்கள்.

பிறந்த வருடம் மாதம் தேதி மணி இடம் முதலியவற்றைச் சரியாகக் குறித்தனுப்புங்கள்.

ஒருவரவும் முற்றிலுஞ் சொல்ல ரூபா 10 ; ஒரு ஜாதகத்தின் பொதுப் பலன் கூற ரூபா 10 ; ஒரு ஜாதகக் குறிப்பு மட்டும் எழுத ரூபா 2 ; குறைநி சயங்களை உரைக்க ரூபா 2.

C. J. கிருஷ்ணசாமி,
38, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

நவசக்தி

சிலம்பு ௧௨, ௧௩

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.
1933.

"நவசக்தி"

சிலம்பு ௧௨, ௧௩.

உள்ளுறை

	பக்கம்
அகமுறை	௨௮௧
அரும் உலோகங்கள்	௯௫
அறிவியலும் சமயமும் - இவற்றின் தற்காலநிலை ...	௩௧௯
"ஆசிரை பின்சென்ற அச்சுதன்"	௧௭௪
ஆற்றலுடை மக்கள்	௩௮௧
இந்தியப் பொருளாதாரம்	௩௧௨
இருவினை	௩௮௭
உடல்நல அறிவு	௨௩௭
உடல் நுட்பம்	௨௯௦, ௩௨௯, ௩௯௧
உண்மை இன்பத்துக்குரிய வழி	௧௩௫
உப்பு வாயுவும் உப்புவாயு உரங்களும்	௪௧௩
ஐக்கியம்	௨௮௪
ஐம்பெரும் பாதகர்கள்	௪௫௫
ஐரோப்பிய போர்	௧௩
கடவுளுடன் ஒன்றுபடுதல்	௩௪௨
கண்ணன் காட்சி	௯௫
கண்ணனென்னுங் கருந்தெய்வம்	௪௧௯
கமலநாதன்	௨௭௫, ௩௫௪
கற்றவர் மடமை	௩௧௩, ௩௮௫
காதலால் கட்டுண்ட காளை	௨௫௫
காதல் அறியுமோ கட்டு	௨௮௯
காரிபால்டி - இத்தாலியின் சுதந்திரச் செல்வர் ...	௫௦௧
காவிரியின் கவின்	௧௪௧
கீதையின் போதனை	௪௯௧
சமரச சன்மார்க்க போதம் ...	௪௩, ௯௦, ௧௨௫, ௧௯௧, ௧௯௮, ௨௩௪, ௨௯௧, ௩௦௩, ௩௩௨, ௩௭௩
சமாதியும் வீட்டையும்	௨௫௨
சிவநெறி விளக்கம்	௪௯
சிவனடியார் சிறப்பு	௧௯௯

பக்கம்

சுந்தர சுலோசனை ... ௫௩, ௯௭, ௧௫௦, ௧௭௫, ௨௧௫, ௨௮௯, ௩௨௨, ௩௫௭, ௩௯௪,
௪௩௩, ௬௯௫, ௬௯௮, ௫௨௮

சைவ சித்தாந்த மகா சமாஜ 4-வது சைவ இளைஞர் கூட்டத் தலைமையுரை ௧௯௨

தமிழர்கட்கு ஒரு வேண்டுகோள் ௯௨

தமிழ்த் தாய் ௧

தமிழ்ப் புலவர் மகாநாடு ௧௯

தமிழ் மாணவர் மகாநாடு ௪

தாவீது மன்னரின் தனிக்கோள் ... ௧௩௮, ௧௭௯, ௨௧௮, ௨௬௯, ௨௭௩

திருக்குறுங்குடி அழகிய நம்பியுலா ௮௧

திருக்கோயில் வழிபாடும் சீர்திருத்தமும் ... ௩௯௭, ௪௨௪, ௪௫௧, ௫௦௫, ௫௩௧

திருமால் அருள் வேட்டல் ௬௧

தீண்டாதார் யார்? ௨௬௩

தீண்டாமை ஒழித்தல் ௨௦௩

தீபேத்திய இராமாயணம் ௨௩௪, ௨௯௯

நமது சிந்தனை ௨௬௯, ௨௯௭, ௩௦௯, ௩௩௭, ௩௭௮, ௪௧௧, ௪௬௭, ௪௮௩, ௫௩௧

நமது நாட்டில் வழங்கும் பழங்கதைகள் ... ௧௦௮, ௧௪௯, ௧௮௨, ௨௦௨, ௩௮௯

நவசக்தி உதயம் ௧௦௨

நெல்விடு தூது ௧௧௭, ௧௫௩, ௧௮௭

பிரம்மச்சரியமே புவிவாழ்வின் கால்கோள் ௨௮௩

பிறர் நம்மைக் கண்டவிதம் ... ௪௨௮, ௪௯௯, ௪௩௩, ௫௨௨

புதிய கல்வியும் புராதன ஆசிரமங்களும் ௧௭௩

புதுயுகப் புலர்ச்சி ௨௦௧

பூகோள விலாசம் ௨௨௩, ௨௫௯, ௨௯௫, ௩௩௧, ௩௭௭, ௪௦௩, ௪௩௯, ௪௭௫, ௫௧௧

பொன்னும் பொருளாதார நெருக்கடியும் ௨௨௫

மெய்யின்பத் துறைகள் ௯௮, ௧௧௦

யோபுவின் பக்தித் திறன் ௪௮௭, ௫௧௯

ரேடியமும் அதனைக் கண்டுபிடித்தோரும் ௨௯

விந்தையான ஒரு பந்தயம் ௩௪௭

வெண்ணிலவு ௩௮௪

ஜலம் ௨௪௦

Registered No. M. 1500.

நவசக்தி

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கரு ஸ்ரீமுக௵ ஐப்பசி௴ பரல் க௨

பூகோள விலாசம்

(தொடர்ச்சி)

இந்தபுர மேலம்பி காபுரம காசிவலோ
சந்திரமா மூன் றுபுரங் காரிகையே—முந்துமதில்

கந்தபுரம்

கந்தபுரத் துய்ய கனகமய மாயிருக்கும்
வந்தமணி மண்டபத்தில் மத்தியினில்—அந்தரத்தில்
மின்னயுத கோடி விளங்குமரி யாசனத்திற்
பொன்னுலகிற் றேவர் புடைசூழச்—சென்னிமுகம்
ஓராறும் வேல்சூல மொண்சிலைவா ளேந்துகர
மீராறு நேத்திரங்க ளீராறுந்—தாராங்
[1]கடம்பவிரு மார்புங் கழலிணையும் பெற்று
நடம்புரியு மஞ்ஞையிலெங் நாளு—மடந்தைகுற
வள்ளிதெய்வ யானையிரு மாதரிரு பாலிருக்க
வெள்ளிவடி. வேல்முருக வேளிருப்பன்—ஒள்ளொளிசேர்
பூவுலகிற் கந்தனிரு பொற்றாள் வழிபடுவோர்
மேவுகந்த சட்டி. விரதத்தோர்—சேவலன்ற
ஆறு படைவீட் டணிவிழவு சேவைசெய்தோர்
தேறுமிவர் கந்தபுரஞ் சென்றெய்தி—யீறிலா
வாயுளொடும் போகநுகர்ந் தண்டர்தொழ வீற்றிருப்பர்

அம்பிகாபுரம்

காயுமொழி சேரம்பி காபுரத்தி—லேயும்
பருதியொரு கோடி பயின்றதெனச் சோதி
விரியு மரிகதத்தா மின்னுர்—திரவியத்தால்
வச்சிரத்தாற் செய்தமைத்த மண்டபத்தி னுப்பமிணுளிர்
வச்சிரக்கற் பீடமிசை வாள்மடவார்—உச்சிதமாம்
பாவாடை வீசப் பனகருல கத்திருக்கும்
பூவாடை வீசும் புரிகுழலார்—நாவாட

(பிரதி)—[1]கடம்பவரு.

மங்களங்கள் கூற மருவுமுயர் விஞ்சையர்கள்
சங்கையின்றி வீணையிசை தான்பயிற்றக்—கொங்குகமழ்
நாமடந்தை கங்கா நதிமடந்தை பூமடந்தை
மாமடந்தை காளி வராகிதுர்க்கை—காமடந்தை
மேனை யருந்ததிபின் மிக்கா மகவிகைபின்
வானுலகி லுள்ள மடவாருந்—தானிதமும்
பொன்மலர்கள் தூவியடி போற்ற மலையரசன்
றன்மகவா மம்பிகையா டானிருப்பள்—நன்னிலத்தில்
அம்பிகையா டன்பாதத் தன்பாய் வழிபடுவோர்
உம்பர்தொழ வவ்வுலகத் துற்றிருப்பர்—நம்பிதன்மேற்

மகாசிவலோகம்

காணு மகாசிவலோ கந்தனையுங் கட்டுரைப்பேன்
ஸ்ரேணுங் கதிரனந்தஞ் சூழ்ந்திதனை—மாணிக்கம்
பச்சை வயிரம் பதுமரா கம்பவளம்
வச்சவிந்த்ர நீலம்வயி டூரியமும்—உச்சிதமாங்
கோமே தகம்புருட ராகமணி கொண்டிழைத்த
தாமே திருப்பணி யங்கமருந்—தேமேவு
மாலயனுங் காணு மறைப்பொருளே யானனமும்
பால்பொருவுஞ் சோதிப் படிகமணி—போலுந்
திருவுருவுஞ் செஞ்சடையிற் சேர்ந்திருக்கும் வெண்மை
மருவு சிறுபிறையு மல்கப்—பொருவரிய
பத்துக் கரமும் பதினைந்து நேத்திரமு
சுத்தமலர்த் தாளிணை யுந்தோன்றப்—பத்த
ருளத்திருக்குஞ் சோதி யொருபதும பீடத்
தளத்திருக்கு மிந்தத் தரைபோ—ருளத்தி
லொருகணமு நீங்கா தியோகுநிலை யுற்றோர்
மருவுசிவ ரூபவடி வாகி—யுருவருவான்
சாரு மகாசிவலோ கந்தனிலே தானடைர்[ந்]து
சீராரு முத்தியினிற் சேர்ந்திடுவர்—நேரிதன்மேல்

அண்டத்தின் கீழ்முதல் மேல் முகடு வரை

அண்டமுக டாங்கீழ்மே லண்டமொன்றின் றன்னுயரங்
கொண்டிருக்கும் யோசனையைக் கூறக்கேள்—விண்டிடுங்கீழ்ப்
பித்திகனங் கோடியதின் பின்மேலுங் காலாக்னி
ருத்ரர்புர மேற்கோடி யோசனைமேற்—சுத்தமுள்ள
வெங்க[ன] லங்கோடி மேற்றாம மைங்கோடி
கொங்கார் நிரையமுப்பான் கோடியின்மேல்—கங்கா
யிரண்டிலக்க மாமதன்மே லேவெளியி னீ[ர]
திரண்டமுப்ப தாயிரமாந் தேனே—கருண்டசனை[க்]
கூர்மாண்ட நன்னகரங் கோடியினி லோரிலக்கஞ்
சோர்வாகு மற்றதன்மேற் சுத்தவெளி—நேராக
வொன்ப திலக்க முறுமதன்மேற் றனதல
மென்பமுதற் பாதாள மீறாகத்—தன்பமறு

மொவ்வொன்று பத்திலக்கம் யோசனையா முள்வெளியு
மொவ்வொன்றாக் [1]கோரயுத யோசனையாஞ்—செவ்விதிகழ்
பாதலத்தின் மேல்வெளியும் பத்திலக்கத் தோரயுத
மீதாட கேசர்புர மேயாகும்—மாதேகே
ளொன்பதி லக்க முறுமதன்மேற் றன்பூமி
யென்பதொரு கோடிகன மேயாகு—மன்பதைகள்
சஞ்சரிக்கும் பூமிமுதற் றன்கீழ் நிலையளவு
மெஞ்சலிலைம் பான்கோடி யோசனையாம்—வஞ்சியமே
பார்மேற் புவலோகம் பன்னந் திலக்கமதாஞ்
சேர்சுவ ருலோகமுங்கேள் சேயிழையே—நேரியதா
யெண்பத்தஞ் சென்று மிலக்கமதா மிங்கிதன்மேற்
பண்புற்ற மாலோகப் பான்மையுங்கேள்—விண்பெற்ற
கோடியிரண் டாமதன்மேற் கோடிசன லோகமெட்டுக்
கோடிதவ லோகமுமேற் கொண்டிருக்குங்—கோடியுமீ
ராறு மதன்மே லயனுலகங் கோடிபதி
னாறு மதன்மே லரியுலகங்—கூறுமதி
னாலாகுங் கோடியின்மேல் நன்றாருஞ் சிவலோக
மேலாறு கோடி யெனவிளம்பு—மேலுமண்ட
மேன்முகடு மோர்கோடி மேதினியில் நின்றளவு
தானைம்பான் கோடியுமே தானாகு—மேன்முகடு
மூற்றெழுகி மேலுலகத் தூடிறங்கி மத்தியெனச்
சாற்றுமா மேருத் தலத்திழிந்து—தோற்றுபுனல்
கீட்டிசையிற் செல்லுஞ் சீர்சீதை யென்றுபெயர்
காட்டு மிளாவிருத கண்டமும்பாய்ந்—தேற்றமுடன்
பத்திரவத் தெய்தியும் பாற்கடலிற் றன்பாயும்
உத்தரத்திற் பத்திரியென் றொருநதி—யத்திசையிற்
கண்ட பிரமியமுங் காணு மிரண்மயமுங்
கண்டுகுரு கண்டங் கடந்துபோய்த்—தெண்டிரையிற்
சாருங் குடதிசையிற் சக்குசையென் றொருநதி
சேரு மிளாவிருதஞ் சென்றப்பால்—ஆருங்
துதிகேது மாலகண்டத் தூடாக மேல்பா
லுததிதனிற் சேர்ந்தோடு முண்மை—யிதுநிற்கத்
தெற்கழகம் கங்கையெனச் சென்றே யிளாவிருதம்
நிற்குமரி கிம்புருடம் நீத்தேகித்—தெற்குப்
பரதகண்டந் தீவொன் பதுங்கடந்து தென்பால்
குரவையினிற் போய்ப்பாயுங் கோதாய்—சாதமதா

புவனம் : 108

பின்னம் புவன மியம்பக்கே ளேந்திழையே
பின்னுமண்டப் பிற்புறத்திற் பித்தியினிற்—றன்னுந்
திசையினுக்கீ ரைந்தாகச் செப்பமொரு பத்துந்
திசையினுக்கு மெண்ணூறு சேரும்—பிசகா
திருக்குமண்டத் துள்ள விருநான்கு சேருந்
தரிக்கும் பிரிதிவியின் றத்வத்—துரைக்கும்

(பிரதி)—[1]கேசரபுர.

புவனமொரு நூற்றெட்டாம் பூவையே யிந்தப்
புவனத் துருத்திரர்தம் பொற்புச்—சிவனை

அனைத்துலகினும் இறைவனது பஞ்சகிருத்தியம் நிகழ்கின்றமை

890 நிகர்வொரு நூற்றெண்மர் நித்தியரா யென்றும்
புகலுமட்ட திக்கினரும் போற்ற—விகலுடைய
பூத கணங்கள் புடைசூழ வேபுவன
நாதர் முறைமுறையாய் நண்ணிடுவ—ரீதினைப்போல்
எண்ணிறைந்த வண்டபிண்ட மெல்லாமும் நாகலிங்க
ருண்ணிறைந்து நின்றே யுயிரினைத்துங்—கண்ணளியா
லாட்டுவித்து நாளு மளவிறந்த போகமெல்லா
மூட்டுவித்தும் பின்னு முறக்குவித்தும்—வாட்டுவித்தும்
பக்குவர்க்குச் சற்குருவாய்ப் பாதமலர் சூட்டுவித்து
மிக்கான முத்தியெனும் வீடளிப்பன்—றக்கமரு

நூற்பயன்

895 தீசரிரு பாதமல ரெங்காளும் போற்றுகின்ற
தாச னுமாபதத் தாரணன்ற—னேசமுடன்
விண்டபூ கோள விலாசமதைப் பூவுலகிற்
கண்டு படிப்பவருங் காதலுடன்—கொண்டிருந்து
கேட்டவரு மர்த்தங் கிளத்தினருந் தானீண்ட
வேட்டெழுதிப் பூசித் திடுவோரும்—வாட்டமில்லா
மைந்தர்பதி னாறுபெற்று மாறுத வாழ்வுபெற்றுத்
தந்தவய தெண்ணூறுந் தாமிருந்தே—அந்தமதில்
899 மேலாஞ் சிவபுரியின் மேவி யினிதுறைவர்
நாலாம் பதத்தி னயந்து.

உ

முடிவுரை

ஒவ்வொரு தேயத்திலும் ஒவ்வொரு சமயத்திலும் தனித்தனியாக உலக வருணனைகள் கற்பித்துக்கொள்ளப்பட்டுள்ளன. கிரேக்கர்களுடைய 'காஸ்மாலஜி' (Cosmology) மிகப் பிரசித்தமானது. பௌத்தர்களது உலகக் கூறுபாடுகள் மணிமேகலையிற் சக்கரவாளக் கோட்டமுரைத்த காதையிற் கூறப்படுகின்றன. ஜைன சமயத்தவர்களது உலகக் கூறுபாடுகளை மேருமந்தர புராணத்திற் சமவசரணச் சருக்கத்திலும் லோகாணி முதலிய பிற நூல்களிலும் காணலாம்.

வைதிக சமயங்களுக்குரிய லோகவிவரணங்கள் புராணேதிகாசங்களில் விரிவாய்த் தரப்படுகின்றன. உதாரணமாக, மச்சபுராணத்தில், 'புவனகோச சமாத்தி' 'பூகோள மேரு வர்ணனை' முதலிய அத்தியாயங்களைக் காண்க. இவற்றை அடிப்படையாகக் கொண்டே மிகப் புராதனகாலத்திற் புராண கதைகளெல்லாம் தோன்றின. அன்றியும் இலக்கியங்களிலும் சமய நூல்களிலும் இவை மலிந்து காணப்படுகின்றன. ஆதலால், இலக்கிய முதலியவற்றில் தக்க பயிற்சியடைய விரும்புவோர்க்கு இவ்வுலக வருணனைகளைத் தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாததாம். இக்காரணம்பற்றியே இவ்விஷயத்தைக் குறித்துத் தனி நூல்கள் இயற்றும் மரபும் நமது நாட்டில் எழுந்தது.

இவ்வாறு தோன்றிய தனி நூல்களுள் ஒன்று 'அண்டகோள விலாசம்' என்பது. உரையோடு கூடிய இதன் பிரதியொன்று சென்னையில் அரசாங்கத்தாரது தொன்னூல் நிலயத்தில் உள்ளது. இதனை இயற்றியவர் வேம்பத்தூரில் ஸரஸ்வதிபீடமென்று கருதப்பட்டவரும் சௌந்தரியலகரி முதலிய நூல்கள் ஆக்கியோருமாகிய கவிராச பண்டிதரின் வமிசத்

திற் பிறந்த முத்துவேங்கடசுப்பையர் என்பவர். இவர் பால்வண்ணராம சாஸ்திரிகள் என்பவரைத் தமது குருவெனக் குறிப்பிடுகின்றார். பிரபந்த தீபிகை இயற்றிய ஆசிரியரும் இவரே.

அண்டகோள விலாசத்தைப்போன்ற பிறிதொரு நூல் இப்போது வெளியிடப்பெறும் பூகோள விலாசம். இதனை இயற்றியவர் 'ஆபத்தாரணன்' என்னும் பெயரினொன்பதும் இவரது ஊர் இராமநாதபுரத்துக்கு வடமேற்கில் 17 மைல் தூரத்திலுள்ள மருதூர் என்பதும்

"‥ . . . . .தக்கமரு
தீசரிரு பாதமலரெந்நாளும் போற்றுகின்ற
தாசனெனுமாபத் தாரணன்றான்—நேசமுடன்
விண்ட பூகோள விலாசமதை"—[கண்ணி : 894 - 6]

என்னும் இந் நூலின் அடிகளால் உணரலாம். நூலாசிரியரைக் குறித்து வேறு யாதும் அறியக்கூடவில்லை.

மருதூர் இப்பொழுது உயிலூர்க்கோயில் என வழங்குகின்றது. இங்கே எழுந்தருளியிருக்கும் நாகநாத சுவாமி பேரில் தலைமலைகண்ட தேவர் அந்தாதி இயற்றியுள்ளமை யாவரும் அறிவர். இவ் அந்தாதி பாடிய வரலாற்றினை,

"‥ . . காடடர்ந்த நற்குடியில் வாழ்மறவன்
மூடனிரு கண்ணில்லான் முத்தமிழும்—பாடத்
தெரிவித்தே யந்தாதி செப்புகென முற்சீர்
தருவித் தருள்புரிந்த சம்பு" —[கண்ணி : 516 - 9]

என்று வரும் இந்நூலடிகள் உணர்த்தும். இதனையே இராமநாதபுர மன்னர் சிவசாமி சேதுபதியவர்கள் மீது சரவணப் பெருமாள் கவிராயரவர்கள் பாடிய விறலிவிடுதூதில்,

"‥ . . . .—முத்தமிழின்
பண்காட்டி யந்தாதி பாடியமெய்த் தொண்டனுக்குக்
கண்காட்டி யாண்டுகொண்ட கண்ணுதலே"

என்று வரும் அடிகளும் தெரிவிக்கின்றன.

மருதூர்த்தலம் பற்றிய வரலாறுகள் பல 489 - 538 வரையிலுள்ள கண்ணிகளிற் கூறப்படுகின்றன.

இந்நூலினை அச்சிடுவதற்குக் கிடைத்த ஏட்டுப் பிரதியின் இறுதியிலே,

'ஆகக் கண்ணி அ௲௫௰௬. சிவகெங்காதரர் கிருபை. உ. ஸ்ரீ பருவதவர்த்தனியம்பாள் சமேத ராமநாதசுவாமி கிருபை யுண்டாக. உ. ௲௮௱௪௰௧ பிலவவருஷம் தையீ ௰௩௨ புதவாரமும் பவுர்ணமையும் பூச நட்செத்திரமுங் கூடின சுபயோக சுபதினத்தில் எழுதி முடிந்தது முற்றும். உ. சிவகுருப்பியோ நம : உ.'

என்று ஒரு குறிப்புக் காணப்படுகின்றது. எனவே இப்பிரதி இற்றைக்கு 92 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பெற்றதாகும்.

இவ் ஏட்டுப்பிரதியை யுதவிய நண்பர் ஆழ்வார்குறிச்சி ஸ்ரீமான். M. P. S. துரைசாமி முதலியார் அவர்கள். இவர்களுக்கு எனது நன்றி யுரியதாகின்றது.

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ்
18—10—33.

S. வையாபுரிப் பிள்ளை.

யோபுவின் பக்தித் திறன்

[திரு. தி. ந. சாரங்கபாணி, எம். ஏ.]

II

அவர் என்னைக் கொன்று போட்டாலும் நான் அவர்மேல் நம்பிக்கையா யிருப்பேன் என்ற யோபு "இறைவனே! இப்பிணியின் கொடுமை என்னால் சகிக்க இயலவில்லை; உம்முடைய தண்டனை என்னால் தாள இயலவில்லை. எனவே,

"உம்முடைய பயங்கரம் என்னைக் கலங்கப் பண்ணாதிருப்பதாக" 13 : 21.

நீர் என்னைத் தண்டிப்பது நியாயமே. என் இளவயதின் பாவம்- இன்றேல் யான் அறியாமல் செய்த பாவம்- என்னைச் சூழ்ந்து நிற்கின்றதுபோலும் ஆதலான்,

"என் அக்கிரமங்களும் பாவங்களும் எத்தனை? என் மீறுதலையும் என் பாவத்தையும் எனக்குணர்த்தும்" 13 : 23.

என் மீறுதல்களை யான் உணர்ந்து வாட, பாவவுணர்வால் யான் என்னைத் தூயவனாக்கிக் கொள்ள எனக்கு என் பாவங்களை யுணர்த்தியருளும்.

"ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமா யிருக்கிறான். அவன் பூவைப்போலப் பூத்து அறுப்புண்கிறான்; நிழலைப்போல நிலைநிற்காமல் ஓடிப்போகிறான்" 14 : 1—2.

நீரிடைக் குமிழிபோல் நின்றழியும் பிறவியாகிய இம் மானிடப் பிறவியைப் பெற்ற பேதையாகிய என்னால் உம்முடைய தண்டனையைத் தாங்க இயலவில்லையே.

"இப்படிப்பட்டவன்மேல் நீர் உம்முடைய கண்களைத் திறந்து வைத்து உம்முடைய நியாயத்துக்கு என்னைக் கொண்டு போவீரோ?" 14 : 3.

"என் பாவத்தின்மேலல்லவோ கவனமா யிருக்கிறீர்" 14 : 16.

என்னையொரு பொருட்டாக மதித்து என் பாவத்திற்காக என்னை நீர் தண்டித்தால் நானென் செய்வேன். ஆண்டவரே! இரங்கும் இரங்கும்!" எனக் குறையிரந்து நிற்றல் நோக்குக.

யோபுவின் மெய்யுரைகளைக் கேட்டு வெகுண்ட எலிப்பாஸ்,

"உம்முடைய வாய் உம்முடைய அக்கிரமத்தைச் சொல்லிக் காட்டுகிறது. நீர் தந்திரமுள்ளவர்களின் நாவைத் தெரிந்துகொண்டீர்"

"நான் அல்ல, உம்முடைய வாயே உம்மைக் குற்றவாளியெனத் தீர்க்கிறது; உம்முடைய உதடுகளே உமக்கு விரோதமாய்ச் சாட்சியிடுகின்றன" 15 : 5—6

நண்பரே! நிறுத்தும் உம்முடைய பிதற்றலை. உம்முடைய உதடுகளே உம்முடைய அக்கிரமத்தை வெளியிடுகின்றன. நீர் பெரிய ஞானியைப் போலும் நீதிமானைப் போலும் பிதற்றுகின்றீரே.

"நீர் தேவனுடைய இரகசிய ஆலோசனையைக் கேட்டு ஞானத்தை உம்மிடமாய்ச் சேர்த்துக் கொண்டீரோ?" 15 : 8.

"மனுஷனானவன் பரிசுத்தமா யிருக்கிறதற்கும், ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் நீதிமானா யிருக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்" 15 : 14.

அந்நிலையில் நீர் நீதிமானைப் போல் ஒழுகல் வீண் புரட்டேயாகும்.

"மாயக்காரரின் கூட்டம் வெறுமையாய்ப் போம்" 15 : 34.

ஆகவே இறைவனை ஏமாற்ற முயலாதேயும்" என்றுரைத்தான்.

எலிப்பாஸின் வெகுளியுரைகள் யோபுவுக்குப் புண்ணில் புளியிட்டது போல் வாட்டினவெனினும், அன்பு நெறி பற்றிய யோபு எலிப்பாஸை நாவாரத் தூற்று.

"ஆனாலும் நான் என் வாயினால் உங்களுக்குத் திடஞ் சொல்லுவேன்; என் உதடுகளின் அசைவு உங்கள் துக்கத்தை ஆற்றும்" 16 : 5

எனக் கூறி.

"நொறுக்குதலின் மேல் நொறுக்குதலை என்மேல் வரப்பண்ணினார்" 16 : 14

"என் கைகளிலே கொடுமையில்லா திருக்கையிலும் என் ஜபம் சுத்தமாயிருக்கையிலும் அப்படி யாயிற்று" 16 : 17.

"மரண இருள் என் கண்ணிமைகளின் மேல் உண்டாயிருக்கிறது" 16 : 16.

"என் சிநேகிதர்கள் என்னைப் பரியாசம் பண்ணுகிறார்கள்; என் கண் தேவனை நோக்கிக் கண்ணீர் சொரிகிறது" 16 : 20.

என்று தம் நிலையையும் நம்பிக்கையையும் விரித்துரைத்து "ஆண்டவரே! என் நண்பர்களின் மீது யான் குறை கூற விழைகின்றிலேன்.

"நீர் அவர்கள் இருதயத்துக்கு ஞானத்தை மறைத்தீர்" 17 : 4.

எனவே! அவர்களென் செய்வார்கள். நண்பர்களே!

"நீதிமான் தன் வழியை உறுதியாய்ப் பிடிப்பான்" 17 : 9.

ஆதலின் நீராத்துயரம், என்னை இறைவன் மாட்டுயான் கொண்டுள்ள மாற நம்பிக்கையை எவ்வாறும் மாற்றிடத் தூண்டாது. ஆகையால் நண்பர்களே!

"இப்போதும் நீங்கள் எல்லாரும் போய் வாருங்கள்: உங்களில் ஞானமுள்ள ஒருவனையுங் காணேன்" 17 : 10.

என்று அமைதியுடன் பதிலீந்தாரெனின் அவருடைய மசீறு நிலையின் திறன் இனிது விளங்கவில்லையோ?

யோபுவின் பதிலுரைகளைச் செவி மடுத்த பில்தாத் வெகுளி விம்ம,

"நாங்கள் மிருகங்களைப்போல எண்ணப்பட்டு உங்கள் பார்வைக்குத் தீழ்ப்புானவர்களா யிருப்பானேன்" 18 : 3.

"துன்மார்க்கனுடைய விளக்கு அணைந்து போம்" 18 : 5.

என்பதை நீர் அறியீரா?

"அவன் பெலனாய் நடந்த நடைகள் குறைந்துபோம்" 18 : 7.

என்று நீர் உணரீரா?

"பயங்கரமான மரணமே அவன் அவயவங்களைப் பட்சிக்கும்" 18 : 13.

என்று ஓரீரா" என யோபு மனம் புழுங்கி,

"நீங்கள் எந்தமட்டும் என் ஆத்துமாவை வருத்தப்படுத்தி - வார்த்தைகளினால் என்னை நொறுக்குவீர்கள்" 19 : 2.

என்னுடைய நிலையை நீங்கள் உணரவில்லையே.

"என் சகோதரரை என்னைவிட்டுத் தூரப்படுத்தினார்" 19 : 13.

"என் பந்து ஜனங்கள் விலகிப் போனார்கள், என் சிநேகிதர்கள் என்னை மறந்துவிட்டார்கள்" 19 ; 14.

"என் வீட்டு ஜனங்களும் என் வேலைக்காரிகளும் என்னை அந்நியனாக எண்ணுகிறார்கள். அவர்கள் பார்வைக்கு நான் பரதேசியானேன்" 19 : 15.

"என் பிராண சிநேகிதர் எல்லாரும் என்னை வெறுக்கிறார்கள். நான் சிநேகித்தவர்கள் எனக்கு விரோதிகளானார்கள்" 19 : 19.

அன்பர்களே! இந்த நிலைமையில் நீங்களிருந்தால் நீங்கள் என் செய்வீர்கள்?

"என் சிநேகிதரே! எனக்கு இரங்குங்கள் எனக்கு இரங்குங்கள்" 19 : 21.

"தேவனைப்போல நீங்களும் என்னைத் துன்பப்படுத்துவானேன்" 19 : 22.

நீங்களும் என் துன்பத்தைப் பெருக்கல் நியாயமோ? நீங்கள் அனைவரும் என்னை எள்ளிநகையாடினும்,

"என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்" 19 : 25.

ஆகையால் உங்களுக்காக யான் வருந்துகின்றேனல்லது உங்களைப் பழிக்கின்றேனல்லை" எனலும் சோப்பார் கண்சிவக்க அங்கம்பதற "யோபுவே! (20:3) உம்முடைய அக்கிரமம் உம்மை வாட்ட எங்களை நீர் நிந்திப்பது என்ன கோலம்.

"துன்மார்க்கரின் கெம்பீரம் குறுகினது என்பதையும், மாயக்காரரின் சந்தோஷம் ஒரு நிமிஷம் மாத்திரம் நிற்கும் என்பதையும்.........நீர் அறியீரோ" 20 : 4—5.

"உருவின பட்டயம் அவர் சரீரத்தையும் மின்னுகிற அம்பு அவன் பிச்சையும் உருவிப் போகும்" 20 : 25.

"இதுவே தேவனால் துன்மார்க்கனுக்குக் கிடைக்கும் பங்கும் அவன் செய்கைக்குத் தேவனால் அவனுக்கு வரும் சுதந்தரமுமாம்" 20 : 29.

என்பதை நீர் அறியீரா? நீதிமான் நீதிமான் என்று நீர் உளற, துன்மார்க்கனுடைய இறுதி உம்மை யணுகியிருத்தலை உணராது எங்களை நிந்தித்துப் பயனென்?" என்றான்.

அதைக்கேட்டு யோபு "நண்பர்களே துன்மார்க்கர்களுடைய இயல்பையும் இறுதியையும் நான் உணர்வேன்.

"அவர்கள் வாழ்வு அவர்கள் கையிலிராது. துன்மார்க்கன் ஆலோசனை எனக்குத் தூரமாயிருப்பதாக" 21 : 16.

அத்தகைய புல்லியர்களின் சகவாசமும் புல்லியயோசனையு மெனக்கும்வேண்டுவதில்லை. ஆதலின்,

"நீங்கள் வீணான ஆறுதலை எனக்குச் சொல்லுகிறது என்ன? உங்கள் மறுமொழிகளில் உண்மைக்கேடு இருக்கிறது" 21 : 34

உண்மையோடியைந்திடா உங்களுடைய ஆறுதல் எனக்கு வேண்டுவதில்லை" என தேமானியனான எலிப்பாஸ்.

"நீர் நீதிமானாயிருப்பதால் சர்வ வல்லவருக்கு நன்மை யுண்டாகுமோ?" 22 : 3.

அன்பரே! நீதிமானா யிருக்கிறேன் நீதிமானா யிருக்கிறேனெனக் கூறிப் பயனென்? உம்முடைய அக்கிரமங்களை நீர் எண்ணிப் பாரும்.

"உம்முடைய பொல்லாப்புப் பெரியதும் உம்முடைய அக்கிரமங்கள் முடிவில்லாதவைகளுமாய் இருக்கின்றனவல்லவா?" 22 : 5.

"விடாய்த்தவனுக்குத் தாகத்துக்குத் தண்ணீர் கொடாமலும் பசித்தவனுக்குப் போஜனங் கொடாமலும் போனீர்" 22 : 7.

"விதவைகளை வெறுமையாய் அனுப்பிவிட்டீர்" 22 : 9.

அவ்வக்கிரமங்களினாலேயே இத்துன்பம் உம்மை யணுகி யிருக்கிறது. நீர் என்மீது கோபங்கொண்டு நிந்திக்கின்றேனென நிந்தித்துப் பயனென்.

"வேதப் பிரமாணத்தை யேற்றுக்கொண்டு அவனுடைய வார்த்தைகளை இருதயத்தில் வைத்துக்கொள்ளவேண்டுகின்றேன்" 22:22.

இறைவனை இரந்து நில்லும். அதனாலே உம்முடைய நியாயம் உம்மைவிட்டகலும். ஆண்டவன் கருணையெனும் ஒளி உம்மீது வீசும்" என்றான். அவ்வுரைகளைக்கேட்ட யோபு எலிப்பாஸை!

"நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை யறிந்தால் நலமாயிருக்கும்" 23 : 3.

என்னாண்டவரைக் காணும் பேற்றை யான் பெறுவனோ?

"அங்கே சன்மார்க்கன் அவரோடே வழக்காடலாம்" 23 : 7.

என்றாலும் நண்பரே!

"ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்" 23 : 7.

"என்கால்கள் அவர் அடிகளைப் பற்றிப் பிடித்தன; அவருடைய நெறியை விட்டு நான் சாயாமல் அதைக் கைக்கொண்டேன்" 23 : 11.

"அவர் உதடுகளின் கற்பனைகளை விட்டு நான்பின்வாங்குவதில்லை" 23 ; 12.

நீர் என்னுமாபோல் துன்மார்க்கனாக யான் என் வாழ்க்கையை நடாத்தவில்லை. எனினும் யானறியாதியற்றிய பாவம் என்னை வாட்டுகின்றதே. துன்மார்க்கனின் இயல்பையும் அவன் இறுதியி லடையுங் கதியையும் நான் அறிவேன். துன்மார்க்கர்கள் தண்டனையடையாதவர்களைப்போல் தோன்றிடினும், நீதிமான் இடிப்புண்டு வாழினும், இறுதியில் துன்மார்க்கன் துன்பத்தையுஞ் சன்மார்க்கன் இன்பத்தையுமெய்துவது திண்ணம்" என்றார்.

யோபின் அறவுரைகளைக் கேட்ட பில்தாத் தற்கால அறிவிலிகள், அறிவின்மையால் அறைவதுபோலும்,

"மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி" 25 : 4.

மனிதன் பிறந்திருந்து இறந்து மறையும் மனிதன் நீதிமானாக இருக்க வியலாதே. அந்நிலையில் நீர் உம்மை நீதிமானாகக் கருதுவதெவன் என்றான். நம்முள் பல ரகத்தான் அடிக்கடி யுதித்தெழும் பெருஞ் சந்தேகமே பில்தாத்

தின் வாய் மொழியிலும் மிளிரல் காண்க.

உடனே யோபு "பில்தாத்தே!

"நீ ஞானமில்லாதவனுக்கு எப்படி உசாவுதுணையாயிருந்து மெய்ப் பொருளைக் குறைவற அறிவித்தாய்" 26 . 3.

உண்மையை உணரா உனக்கு மனிதன் நீதிமானாக இருப்பது பெரும் ஆச்சரியமாகவே யிருக்கும். ஆனால் அன்ப!

"என்சுவாசம் என்னிலும் தேவன் தந்த ஆவி என் நாசியிலுமிருக்குமட்டும் - என் உதடுகள் தீமையைச் சொல்லுவது மில்லை என் நாக்கு கபடம் பேசுவது மில்லை என்று - என் நியாயத்தைத் தள்ளி விடுகிற தேவனும் என் ஆத்துமாவைக் கசப்பாக்குகிற சர்வ வல்லமையுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" 27 ; 23 : 4.

ஆதலான் உன்னுடைய உரை என்னை என் கொள்கைகளினின்றும் எவ்வகையானும் மாற்றிடாது.

"என் நீதியைக் கெட்டியாய்ப் பிடித்திருக்கிறேன்; அதை நான் விட்டுவிடேன். நான் உயிரோடு இருக்குமளவும் என் இருதயம் என்னை நிந்திக்காது" 27 : 6.

மானிடப் பிறவியின் மாண்பை நீங்கள் உணரவில்லை. உலகிடை நிலவும் ஜீவராசிகளுள் தலைசிறந்து விளக்குபவன் மனிதனே என்பதை நீங்கள் உணர்தல் வேண்டும். விலை மதித்தற்கரிய பல பொருள்களை நாம் உலகில் காண்கின்றோம். அவைகளை யெல்லாம் நாம் கொள்ளவும் விலையீந்து, வாங்கவும் ஒல்லும். ஆனால்,

"ஞானம் கண்டெடுக்கப் படுவதெங்கே? புத்தியினுடைய இடம் எது?" 28 : 12.

ஞானம் இருக்குமிடத்தை நாம் அறிய வியலுமா?

"அதின்விலை மனுஷனுக்குத்தெரியாது." 28 : 13.

அதனை விலைகொடுத்து வாங்கவும் ஒல்லுமோ. எனவே,

"ஞானம் எங்கேயிருந்து வரும்? புத்தி தங்கும் இடம் எங்கே" 28 : 20

"தேவனே அதின்வழியை அறிவார்" 28 ; 23.

"இதோ ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம் பொல்லாப்பை விட்டுவிலகுவதே புத்தி?" 28 :28.

எனவே, ஞானத்தை நாம் ஆண்டவனருளா லன்றோ பெறல்வேண்டும்? ஆண்டவனை யுணரா அறிவும், அவரை நாடா மனமும், அவரைப் போற்றா நாவும் ஞானத்தைக் கொள்ள ஒல்லுமோ? ஞானத்தைப்பற்றிப் பேசவும் முறையோ? அன்பர்களே! அவருடைய பேரருள் என்னைச் சூழ்ந்து நின்ற நாட்களில் எத்துணைச் சிறப்பை நான் எய்தினேன்.

"முறையிடுகிற ஏழையையும் திக்கற்ற பிள்ளையையும் உதவியற்றவனையும் ரட்சித்தேன்" 29 : 12.

"நீதியைத்தரித்துக் கொண்டேன்" 29 : 14.

"நான் குருடனுக்குக் கண்ணுஞ் சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன்" 29 : 15.

ஆனால் இப்பொழுதோ,

"என்னிலும் இளவயதானவர்கள் என்னைப் பரியாசம் பண்ணுகிறார்கள்" 30 : 1.

"நான் அவர்களுக்குப் பாட்டும் பழமொழியும் ஆனேன்" 30 : 9.

"இப்பொழுது என் ஆத்மா முறிந்துபோயிற்று" 30 : 16

"இராக்காலத்திலே என் எலும்புகள் துளைக்கப்பட்டு என் நரம்புகளுக்கு இளைப்பாறுதல் இல்லாதிருக்கிறது" 30 : 17.

ஆ! ஆண்டவரே!

"உம்மை நோக்கிக்கூப்பிடுகிறேன். நீர் எனக்கு மறு உத்தரவு கொடாதிருக்கிறீர்; கெஞ்சி நிற்கிறேன்; என்மேல் பராமுகமாயிருக்கிறீர்" 30 : 20.

அன்பர்களே! யான் துன்மார்க்கனாக இருந்தேனென நீங்கள் என்னைப் பழிக்கின்றீர்கள்.

"என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்ப தெப்படி" 31 : 1.

"என் நடைகள் வழியைவிட்டு விலகினதும் என் இருதயம் என்கண்களைப் பின்தொடர்ந்ததும் ஏதாகிலும் ஒருமாசு என்கைகளில் ஒட்டிக்கொண்டதும் உண்டானால்

அப்பொழுது நான் விதைத்ததை வேறொருவன் புசிப்பானாக" 31 : 7, 8.

"என் வேலைக்காரனானாலும் என் வேலைக்காரியானாலும் என்னோடு வழக்காடும்போது அவர்கள் நியாயத்தை நான் அசட்டைப் பண்ணியிருந்தால் - தேவன் எழும்பும்போது நான் என்ன செய்வேன்; அவர்விசாரிக்கும் போது நான் அவருக்கு என்னமறு உத்தரவு சொல்லுவேன் - தாயின் கர்ப்பத்தில் என்னை உண்டுபண்ணினவர் அவனையும் உண்டுபண்ணினார் அல்லவோ" 31 : 13, 15.

நண்பர்களே!

"என் பகைஞனுடைய ஆபத்திலே நான் மகிழ்ந்து பொல்லாப்பு அவனுக்கு நேரிட்டிருந்தபோது களிகூர்ந்திருந்தேனோ" 31 : 29.

எனவே, நான் ஆண்டவனுடைய அருள் நெறியைப்பற்றி என் வாழ்க்கையை நடாத்தினமையான் நான் சன்மார்க்கனே யாவேன் என்று யோபு உளங் கசிந்துரைத்தார்.

மேலோதிய உரைகளில் ஆண்டவரை அன்புடைய அப்பனாக வரித்த யோபு மக்கட் கூட்டத்தைச் சகோதரர்களாகக் கருதல் முறையேயாம். அத்தகைய சகோதர வாஞ்சை நம்மிடத்தில் இலங்குகின்றதா? நம்முடைய வாழ்க்கையில் அவ்வாஞ்சை விளங்குகின்றதா?

இரக்ஷகரின் "நல்ல சமாரியன்" உபமானச்சரிதை வேத புத்தகத்திலும், குருட்டுப்பாடமாகவும் இருக்கின்ற நல்லான் எத்தகைய வேற்றுமைகள் நம்முள் அரும்புகின்றன. இவன் பிராமணகிறிஸ்தவன், இவன் தமிழக் கிறிஸ்தவன், இவன் பஞ்சமகிறிஸ்தவன் எனும்பிறப்பு வேற்றுமை ஒருபால் விளங்க, உரிமை வேற்றுமை மறுபுறம் இலங்க, மதவேற்றுமை எங்கணுந் துலங்க, சகோதர வாஞ்சையை - சாதிமத பேதங்கடந்த தூயநெறியாகக் கிறிஸ்து அண்ணல் எடுத்துக்காட்டாகத் தம்வாழ்க்கையிலேயே எடுத்துக் காட்டிய அன்பு நெறியை - நாம் மறந்தாம் என்னுகின்றோமா? தம்முடல் பொருளாவி எனும் மூன்றினையும் நம் பொருட்டு ஒப்பற்ற தியாகஞ் செய்த இரக்ஷகரின் சமயத்தை நாமும் சேர்ந்தவர்கள் என்று கூறுகிற உரிமைக்கு நாம் உரியவராகும் வாழ்க்கையை நடாத்துகின்றோமா? ஆண்டவனுடைய அருளான் அவனுடைய நெறிபிறழாது "யான் என் வாழ்க்கையை நடாத்தினேன், எனவே, யான் சன்மார்க்கன் என பக்தியால் போதரும் இறுமாப்புடன் யோபுவைப் போலும் நாமும் அறைய இயலுமா?", பகைவரையுங் காதலிக்கும் அன்பன்றோ அன்பு. "மனந்திரும்புங்கள்" என்று இயேசுபெம்மான் தம்தொண்டை உலகிலாற்றத் தொடங்குங்கால் இசைந்த தூய வார்த்தைகள், என்றும் நம் மகத்தில் இருக்குமேல் நம்முடைய வாழ்க்கைப்பண்படுமென்பதற் கோரையமு மில்லை.

நிற்க, யோபுவின் மொழிகளை அதுகாறும் வாளாவிருந்து செவிமடுத்த எலிகூவுக்குக் கோபம் மூண்டது. தன்னை நீதிமானெனப் பல்வகையானும் யோபு முடிவு கட்டியதே அவனுடைய வெகுளியை மூட்டியதெனக் கூறலும் ஒவ்வும். யோபுவின் உரைகளைக் கேட்டுப் பதிலுரைய இயலாது வாளா கிடந்த யோபுவின் நண்பர்களாகிய எலிபாஸ் பில்தாத் சோபாரெனும் மூவர்மீதும் அவன் சீற்றங்கொண்டான். யான் வயதில் சிறியவனாக இருத்தலான் நீங்கள் பேசி முடியுங்காறும் வாளா விருந்தேன். இப்பொழுதோ யோபுவுக்கு பதிலளிய இயலாது நீங்கள் வாளாயிருத்தலான் அவருக்கு யான் பதிலுரையத் துணிந்தேன்.

"பெரியோரெல்லாம் ஞானிகளல்ல; முதியோரெல்லாம் நீதியை யறிந்தவர்களுமல்ல" 32 : 9.

எனவே, நாம் வயதைப் பொருட்செய்பலாகாது. ஆதலான் யோபுவின் உரைகளுக்கு யான் பதிலளிக்கத் துணிந்தேன். யோபுவே!

"நான் மீறுதல் இல்லாத சுத்தன்; நான் குற்றமற்றவன்; என்னில் அக்கிரமமில்லை; இதோ என்னில் அவர் குற்றம்பிடிக்கப் பார்க்கிறார். என்னைத் தமக்குச் சத்துருவாக எண்ணிக்கொள்ளுகிறார்" 33 : 9, 10.

என்று நீர் இயம்பியதைச் செவியுற்றேன்.

“நீர் நீதியுள்ளவர் அல்லவென்று உமக்குப் பிரதியுத்தரமாகச் சொல்லுகிறேன்” 33 : 12.

பெரியோரே !

“நான் உமக்கு ஞானத்தை உபதேசிப்பேன்” 33 : 33.

என்று இறுமாப்புடன்,

“யோபு : நான் நீதிமான் ; தேவன் என் நியாயத்தைத் தள்ளிவிட்டார் என்றும் நியாயம் என்னிடத்தில் இருந்தும் நான் பொய்யனென்று எண்ணப்படுகிறேன் ; மீறுதல் இல்லாதிருந்தும் அம்பினால் எனக்குண்டான காயம் ஆறாததாயிருக்கிறதென்றும் சொன்னாரே” 34 : 5, 6, 7.

ஆ ! யோபுவே நீர் இறைவன் நீதிமான்களைத் தண்டிக்கிறார் என்று கூறுவது முறையா ?

“நீதியைப் பகைக்கிற ஒருவன் ஆளக்கூடுமோ” 34 : 17.

பெரியோர்களே !

“யோபு அறிவில்லாமல் பேசினார் ? அவர் வார்த்தைகள் ஞானமுள்ளவைகள் அல்லவென்று புத்தியுள்ள மனுஷர் என் பட்சமாய்ப் பேசுவார்கள்” 34 : 34 , 35.

ஆ ! யோபுவே,

“என் நீதி தேவனுடைய நீதியைப் பார்க்கிலும் பெரியதென்று நீர் சொன்னது நியாயம் என்று எண்ணுகிறீரோ” 35 : 2.

உமக்கு மெய்ஞ்ஞானத்தை யான் அறிவுறுத்துகின்றேன்.

“தேவன் மகத்துவ முள்ளவர்; அவர் ஒருவரையும் புறக் கணியார்; மனஉருக்கத்திலும் அவர் மகத்துவ முள்ளவர் ; அவர் துன்மார்க்கரைப் பிழைக்க ஒட்டாதிருக்கிறார் ; சிறுமையானவர்களின் நியாயத்தை விசாரிக்கிறார்” 36 : 5, 6.

கருணை மிகுந்த அவர்,

“சிறுமைப்பட்டவர்களை அவர் சிறுமைக்கு நீங்கலாக்கி, அவர்கள் ஒடுக்கப்பட்டிருக்கையில் அவர்கள் செவியைத் திறக்கிறார்” 36: 15.

எனவே,

“அப்படியே அவர் உம்மையும் நெருக்கத்தினின்று விலக்கி ஒடுக்கமில்லாத விசாலத்திலே வைப்பார்...... நியாயமும் நீதியும் உம்மை யாதரிக்கும்” 36 : 16 : 17.

ஆதலின் யோபுவே நீதிமான் நீதிமான் என வீண் வார்த்தையாடல் நீத்து,

“தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளைத் தியானித்துப் பாரும்” 37 : 14.

“சர்வவல்லவரை நாம் கண்டு பிடிக்கக்கூடாது அவர் வல்லமையிலும் நியாயத்திலும் பெருத்தவர் ; அவர் மகா நீதிபரர். அவர் ஒடுக்க மாட்டார். ஆகையால் மனுஷர் அவருக்குப் பயப்படவேண்டும். தங்கள் எண்ணத்தில் ஞானிகளாயிருக்கிற எவர்களையும் அவர் மதிக்கமாட்டார்” 37 : 23, 24.

யோபே உம்மைப்போல் தம்மைத் தாமே ஞானியெனப் போற்றிக்கொள்ளும் பித்தர்களை அவர் மதிக்கமாட்டார் என்றியம்பியதும் பெருங் காற்றி விருந்து,

“அறிவில்லாத வார்த்தைகளினால் ஆலோசனையை அந்தகாரப் படுத்துகிற இவன்யார்” 38 : 2.

என்றொரு சப்தம் எழுந்தது. எலிகூவின் வீரஞான உரைகள் ஒடுங்கின. அக்காற்றின் வாயிலாகப் பேசியகர்த்தர் யோபை நோக்கி,

“சர்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் யார்” 40 : 2.

என்று வினவ யோபு மனங்கசிந்து நடுங்கி,

“இதோ நான் நீசன், நான் உமக்கு என்ன மறுஉத்திரவு சொல்லுவேன்” 40 : 4.

“தேவரீர் சகலத்தையுஞ் செய்யவல்லவர்” 42 : 2.

“நீர் எனக்குச் செவிகொடும். அப்போது நான் பேசுவேன்” 42 : 4.

“இப்பொழுதோ என்கண் உம்மைக் காண்கின்றது” 42 : 5.

“நான் என்னை அருவருத்துத் தூசியிலுஞ் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்” 42 : 6.

எனலும் இறைவன் இரங்கி யோபுவின் பக்தியின் திறனையோராது அவனை இழித்துரைத்த எலிபாஸ் முதலியவர்களைக்கடிந்து யோபுவுக்கு முன்னிருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும் இரண்டத்தனையாக அருளுக்கருளினார். யோபுவின்

துயரம் அவரைவிட்டகன்றது அவர் பற்றிய நெறியும் புத்துயிர்க் கொண்டது. யோபு பெரிய நீதிமான் என உலகம் உணர்ந்தது.

இதுகாறும்நாம்ஆராய்ந்த யோபின் சரிதை உண்மையில் பக்திநெறியைப் பற்றினோர் இன்பத்திலுந் துன்பத்திலும் இறைவனை இகழார் என்றபெருண்மையையே எடுத்தோதுகின்றது. ஆண்டவரேயான உம்முடைய நெறியைப் பற்றி நிற்கின்றேன். மனம் வாக்குக் காயத்தினாலும் யான் தீமையை விழைந்திலேன். நான் நீதிமான் என்றுகூறும் உரிமை யோபுவின் பக்தியின் திறனையன்றோ வெள்ளிடைமலையென விளக்குகின்றது. சன்மார்க்கன் எக்காலத்திலும் இறைவனால் கைவிடப்படான் என்னும் மெய்ம்மை அங்கைக் கனியென இச் சரிதையினின்றும் போதருகின்றது.

புற வேடத்தை நம் மனம் நாடும் போதும் மதவேற்றுமைகள் நம்மகத்துள் அரும்பும் போதும் சாதிப் பூசல்கள் நம்முள்ளத்திலுதிக்கும் போதும் யோபுவின் சரிதம் நம் அகக்கண்முன் தோன்றி நம்முடைய வாழ்க்கையைப் பண்படுத்துக.

யோபின் சரிதையை ஆராயுங்கள். அவருடைய தாழ்மையின் சிறப்பையும் அன்பின் மாண்டையும் பக்தியின் தூய்மையையும் இறுதியில் அவர் எய்திய பேற்றையும் உய்த்துணருங்கள்.

யோபெய்திய சாதிமத பேத, இன்ப துன்ப வன்மங்கடந்த தூயநிலையாகிய பக்தியோ டியைந்த சமரச சன்மார்க்க ஞான நிலையை நாமும் எய்திட, அன்பு நெறியோங்க, அன்பர் பணி செழிக்க ஆண்டவன் அருள்புரிக.

பிறர் நம்மைக் கண்டவிதம்

மார்க்கோபோலோ யாத்திரை

[திரு. சோமசுந்தர தேசிகர்]

IV

இந்தப் பட்டினம் உள்பட இந்தியா முழுமையிலும் தாம்பூலம் [1]என்ற ஓர் இலையை வாயில் அடக்கி வைத்து மென்று, அதனாலூறும் நீரை உமிழ்வது வழக்கமாகவிருக்கிறது. பிரபுக்களும் பெரியோரும் இந்த இலையோடு பச்சைக் கர்ப்பூரம் முதலான வாசனைத் திரவியங்களைக் கூட்டி சுண்ணாம்புஞ் சேர்த்துப்போடுகின்றனர். இது தேகாரோக்கியமுடையதென்று கூறுகின்றனர். ஒருவன் பிறனொருவனை அவமானப்படுத்த எண்ணினால் பகைவன் வரும்போது வெற்றிலையையாவது எச்சிலையாவது அவன் முகத்தில் துப்புவான். துப்புண்டவன் ஓடி யரசனுக்கு அறிவித்து இந்த அவமானத்துக்காகச் சண்டைபோட உத்தரவு கேட்பான். உடனே அரசன் கத்தியும் கேடயமும் கொடுக்க, அவைகளைப்பெற்று இருவரும் ஒருவர் மடியும்வரை போராடுவர். இந்த வேடிக்கையைப் பார்க்கச் சனங்கள் திரள் திரளாகக் கூடுவார்கள். ஆனால் அவர்கள் கத்தியின் முனையைக் கொண்டு சண்டையிடுவது அரசனால் தடுக்கப்பட் டிருக்கிறது.

குமரி[1]

குமரி என்பது இந்தியாவைச்சார்ந்த ஒரு நாடு; அந்நாட்டில் துருவமண்ட

---

[1]தாம்பூல் என்பது பாரசீகச் சொல். வெற்றிலை யென்பது பொருள். இது பொழுது தாம்பூலம் என்பது வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மூன்றுஞ் சேர்ந்ததற்குப் பெயராக வழங்குகிறது.

[1]கொல்லத்தைக் கூறிப் பின்னர் குமரியைக் கூறுவர் போலோ. இங்கு வரிசைத்

லத்தைக் காணலாம். நாங்கள் சாவகத்தை விட்டபின் இதனைப் (துருவமண்டலத்தை) பார்க்கவேயில்லை. இதனைப் பார்ப்பதற்காக முப்பதுகட்டையளவு கடலிற் செல்லவேண்டும்; அப்பொழுது துருவமண்டலம் தண்ணீர் மட்டத்திற்குமேல் ஒருமுழ உயரத்திற் காணப்படும்.

குமரி யொரு காடடர்ந்த நாடு. அங்குப் பலவித விலங்குகள் வாழ்கின்றன; அவற்றுள் வானரங்கள் மக்களைப்போலக் காணப்படும். மந்தி, கரடி, சிங்கம், புலி ஏராளம்.

கொல்ல நாடு[1]

மாபார் நாட்டைவிட்டு ஐநூறுகட்டை தென்மேற்காகச் சென்றால் கொல்ல நாடு இருக்கின்றது. நாட்டு மக்களெல்லாம் படிம வழிபாட்டுக்காரரே; சில கிறிஸ்தவரும் யூதருமுண்டு. அந்நாட்டினருக்கென ஒரு மொழியும், [2]அவர்களை ஆள ஓரரசனுமுண்டு. அவ்வரசன் ஒருவனுக்குக் கீழ்ப்பட்டவனல்ல.[3]

இங்குச் சப்பங்கி மரம் ஏராளமாகவுண்டு. இதற்குக் கொல்லச் சப்பங்கியென்று பெயர்; [4]இது மிக நேர்த்தியானது. முதற்றரமான இஞ்சி யுண்டாகிறது.[1] அதனைக் கொல்ல மென்றே வழங்குவர். மிளகுகூட நாடுமுழுவதும் ஏராளமாகப் பயிராகின்றது. அது எவ்வாறுண்டாகின்றதென்று கூறுவேன்! மிளகு தானாக உண்டாகும் காட்டுச் செடியன்று; அது பயிரிட்டு நீர்பாய்ச்ச வேண்டியதொன்று. மே, ஜூன், ஜூலை மாதங்களில் மிளகு சேகரிக்கப்படுகின்றது. நல்ல நீலச்சாக்கு மிகுதி: அவர்கள் ஒருவகைச் செடியைச் சேகரித்து [2]வேர்களைக் களைந்து விட்டு ஒருபெரிய பாண்டத்தில் போட்டு ஊற விடுகின்றனர். அவை குழம்பினவுடனே இறுத்து வெய்யிலில் உலரவிட்டு நாலு அவுன்சு வில்லைகளாக நறுக்கி யெடுக்கின்றனர். அந்நாட்டில் வெப்பம் மிகுதியானதால் அதனைப் பொறுப்பது துர்லபம். அங்கு ஓடும் ஆற்றுநீரில் ஒரு முட்டையைப் போட்டால் அது சிறிது தூரஞ் செல்வதற்குள் சூரிய வெப்பத்தினால் வெந்துபோம்.

மான்ஸி,[3] அரேபியா, லெவாண்டு நாடுகளிலிருந்து வரும் வணிகர் பண்டங்களைக் கொண்டுவந்து கொடுப்பதாலும் கொள்வதாலும் பெருத்த லாபமடைகின்றனர்.

இந்நாட்டில் மற்றை நாட்டிலில்லாத பலவித விலங்குக ளிருக்கின்றன. கறுப்பு நிறத்தையன்றி வேறு நிறமற்ற சிங்கங்களிருக்கின்றன; பலவித நிறக் கிளிகளுமுண்டு; பனிக்கட்டி போன்று வெண்மையான உடலுஞ் சிவந்த மூக்குமுடைய கிளிகளும், சிவப்பு, நீல நிறமுடையனவும் பார்ப்பதற்கு அழகுடையனவு மிருக்கின்றன; பச்சைக் கிளிகளு முண்டு. இன்னுஞ் சிறிய கிளிகள் அழகாக விருக்கின்றன. மயில்கள் நம்நாட்டு மயில்களை விடப் பெரிதானவை. நம் நாட்டைப் போலன்றி அங்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடுண்டு. இன்னு

கிரமமாக எழுதியிருக்கிறது. இவர் இதனை யொரு நாடாகக் கூறுகின்றனர்.

[1]கொல்ல நாடு சேரநாடாகும்.

[2]மலையாள மொழி. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலேயே மலையாளம் எழுத்து வழக்கில் வந்தது.

[3]சுயேச்சை யுடையவன்.

[4]சப்பங்கி இது முள் அடர்ந்த காட்டு மரம். விறகாக உபயோகப் படுகிறது. இதனிலிருந்து ஒருவகைச் சாயம் இறக்குகின்றனர். இரும்புத்தூளைச் சேர்க்க மங்கிய பழுப்பு நிறமும், படிக்காரத்தைச் சேர்க்க, சிவப்பு நிறமும் உண்டாகின்றன. இதனை Caesalpinia Sappan என்பர். இது Colowni என்றும் Amery என்றும் Tivi என்றும் அழைக்கப்படும். சேரநாட்டினது கோலமணி என்று பேர் பெறும்; அதுவே முதற்றரமானது.

[1]இஞ்சியை புலர்த்திச் சுக்காக ஏற்றுமதி செய்வர்.

[2]இது அவுரிச் செடி.

[3]சீனதேசம்.

மென்ன சொல்லவேண்டும்? அங்கிருப்பவைகளெல்லாம் இந்நாட்டிலிருப்பனவற்றினின்றும் வேறுபட்டவையாக விருப்பதோடு நேர்மையு மழகுமுடையவை. பழங்கள் விலங்குகள், பறவையெல்லாம் அவ்வாறே; அவையெல்லாம் அதிக வெப்பத்தா லவ்வாறுகின்றன.

தானியங்களில் நெல்லையன்றிப் பிறிதொன்றில்லை. சாராயங்கூட அவர்கள் பனை வெல்லத்திலிருந்து காய்ச்சுகின்றனர். அது விரைவில் போதையைக் கொடுக்கின்றது. மக்களுக்கு வேண்டிய எவ்வகைப் பண்டமும் அந்நாட்டிலுண்டு. விலையும் மிகக்கொஞ்சம். அங்கு சிறந்த சோதிடரும் மருத்துவரு மிருக்கின்றனர். மக்களெல்லாம் கருநிற முடையவர். ஆடவர் பெண்டிரென்ற இருபாலாரும் இடையில் ஒரு நேர்மையான ஆடையைத் தவிர வேறொன்றுமின்றி நிர்வாணமாகச்செல்கின்றனர். அவர்களுள் அத்தை பிள்ளை பெண்களை மணப்பதும், தமையனிறந்தபின்னர் அவன் மனைவியைத் தம்பி மணப்பதும் வழக்கம். இந்த வழக்கம் இந்தியா முழுவதுமுண்டு. இனி இந்நாட்டைப்பற்றிக் கூறவேண்டிய தொன்றுமில்லை.

எலி நாடு[1]

குமரியிலிருந்து முந்நூறு கட்டையளவிலுள்ளது எலி நாடு. நாட்டினர் விக்கிரஹ ஆராதனைக்காரர். அரசனொருவனுண்டு. அவனும் ஒருவருக்குக் கீழ்ப்பட்டவனல்லன். அவர்களுக்கென ஒரு விநோதமான மொழியுண்டு. அவர்களுடைய நடையுடை பாவனைகளைப்பற்றியும் நாட்டுப் பண்டங்களைப் பற்றியும் கூறுவேன்: நம் நாட்டுக்கு அருகாமையில் வருவதால் அவை விநோதமாகவிரா.

இந்நாட்டில் கப்பற்றுறைமுகங்கள் கிடையா. எனினும் ஆழமுள்ள ஆற்றுமுகங்களும் கழிகளுமுண்டு. மிளகு, சுக்கு, மற்றைய வாசனைப் பண்டங்கள் (சம்பாரப் பொருள்கள்) ஏராளமாக உண்டாகின்றன. அரசன் அதிக திரவியவந்தன்; அதிக சேனை இல்லை. ஆயினும் இயற்கையரண் மிகுதியாகையால் அந்நாட்டை யனுகுவது அசாத்தியம்; அதனால் அவன் ஒருவருக்கும் அஞ்சுவதில்லை. பிறநாடு செல்லும் கப்பல் ஏதாவது அவர்கள் நாட்டுக் கழிமுகத்திற் சேருமானால் அக்கப்பலைக் கொள்ளையடிப்பர். ஏனெனில் பிறநாடு செல்ல வேண்டி வந்தது தெய்வாதீனமாகையால் பண்டங்கள் எங்களுக்குரிமையுடையன என்பர். அவர்கள் அவ்வாறு செய்வது பாவச் செய்கையாகக் கருதவில்லை. இந்தப் பிழையான எண்ணம் இந்தியநாடு முழுவதுமுண்டு. ஆனால் அத் துறைமுகத்திற்கே வந்த மரக்கலங்களை மரியாதையுட னேற்று கண்ணியமாக நடத்துவர். மான்ஸி முதலானவிடங்களிலிருந்துவரும் மரக்கலங்கள் விரைவாகப்பண்டங்களைப் பறித்துவிட்டு, வேண்டுவனவற்றை ஏற்றிக்கொண்டு எட்டு நாட்களுட் சென்றுவிடும்; அதற்குக் காரணம் துறைமுகங்கள் ஆற்றுவாயும் மணல் மேடுமாயு மிருப்பதுதான். மான்ஸியினின்றும் வரும் மரக்கலங்கள் பெரிதான நங்கூரங்கள் வைத்திருப்பதால் மணல்மேடுகட்கு அஞ்சுவதில்லை. அந் நங்கூரங்கள் எந்தக் காற்றிலு மசையாமலிருக்கும்.

இங்கு ஏராளமாகச் சிங்கங்களும் காட்டு விலங்குகளுமுண்டு; வேட்டையாடக்கூடிய விலங்குகளும் பறவைகளும் மிகுதி.

---

[1] இது எழில் மலைநாடென் றிருக்க வேண்டுமென்பர் K. N. சிவராஜ பிள்ளை. மேற்குத் தொடர்ச்சி மலையில் காணியம் பாடிக் கணவாய்க்கு வடக்கிலுள்ளதை எழில் மலையென்றும், தெற்கிலுள்ளதைப் பொதியில் என்றும் பிரித்திருந்தனரென்றும், முற்காலத்தில் இது நன்னனுடைய நாடு என்றும் கூறுவர். தமிழர் வரன்முறை பக்கம் 79. எழில் மலை எழுமலையாகிப் பின் எழுமலையாய்த் திரிந்து எலிமலை யாகிவிட்டது. ஐரோப்பியர் ராட் மவுண்டின் (Rat Mountain) என்று கூற, மூஷிகநாடாக மாறிவிட்டது. அரச பாரம்பரையும் உண்டாகிவிட்டது.

ஸிலோன்[1]

அங்கமனின்[2] தீவிலிருந்து ஆயிரங்கட்டை தென்மேற்கே பயணமானுல் ஸிலோன் என்ற தீவை யடையலாம். அது உலகத்திலேயே அதே அளவுள்ள தீவுகளிற் சிறந்த தீவு. கப்பலோட்டிகளின் குறிப்பிலிருந்து அத்தீவு 3600 மைல் சுற்றளவு இருந்ததாகத் தெரிகிறது. ஆயினும் இதுபொழுது 2400 மைல் சுற்றளவே இருக்கின்றது.[3] வடக்கிலிருந்து காற்று பலமாக அடிப்பதால் அத்தீவின் பெரும்பாகம் கடலில் மூழ்கிவிட்டது அதனல் அத்தீவு முன்னிருந்தபடி யிராமற் சிறியதாக விருக்கின்றது. மேலும் வடகாற்றடிக்கும் பக்கம் தாழ்வாகவும் சமுத்திர மட்டத்திற்குச் சரியாகவு மிருப்பதால் கப்பலிலிருந்து பார்க்கும்போது தரை தெரிவதில்லை. அந்தத் தீவைப் பற்றி விவரிப்பேன்:

அந்நாட் டரசனுக்குச் சேந்தமன்[4] என்பது பெயர். அந்நாட்டார் பிறருக்குக் கீழ்ப்பட்டவரல்லர்; படிம வழிபாட்டினர்; அவர்கள் இடையில் அணியும் ஆடையைத்தவிர வேருடையின்றி நிர்வாணமாகத்திரிகின்றனர். கோதுமை விளைவதில்லை. அரிசியு மெள்ளும் விளைகின்றன. எள்ளிலிருந்து எண்ணெயெடுக்கின்றனர். அவர்களுக்கு மாமிசம், பால் முதலாயினவே ஆகாரம். மரச்சாருன கள்ளுமுண்டு. உலகிலுள்ள சப்பங்கி மரங்களில் முதற்றரமானவை இங்குண்டு. இனி இவைகளை விட்டு உலகிலேயே உயர்ந்த பொருள்களைப் பற்றிக் கூறுவேன். மாணிக்கங்கள் இங்கே உண்டாகின்றன. இந்தீவையன்றி வேறிடங்களில் மாணிக்க முண்டாவதில்லை. அங்கு மரகதம், கோமேதகம் வைடூரிய முதலான இரத்தினங்களுமுண்டு. இந்நாட்டரசன் உலகிலேயுள்ள மாணிக்கங்களிலெல்லாம் பெரிய மாணிக்கம் ஒன்று வைத்திருக்கின்ருன்; அது எவ்வாறிருக்கிறதென்பது பற்றிக் கூறுகிறேன்: அது ஒரு முழ நீளமுள்ளது; முன் கைப் பருமனுள்ளது; பார்வைக்கு மிக்க ஒளியுடையது[1]; குற்றமற்றது. நெருப்பைப் போல் ஒளியுடையது. அதன் பெறுமானம் மதிக்க முடியாததாகையால் அதன்விலை குறிக்க முடியாது. சீன சக்கரவர்த்தி[2] ஒரு தூதனுப்பி அந்த மாணிக்கத்தைத் தனக்கு விலைக்குக் கொடுக்கும்படியும், அதற்கு மாருக ஒரு பட்டினத்தின் விலையாவது அவன் விரும்பிய பொருளாவது தருவதாகக் கூறினன். அதற்கு இந்த அரசன் தான் எக்காரணத்தை முன்னிட்டும் அதனை விற்கவியலாதென்றும், அது பூர்வீக சொத்தென்றும் கூறிவிட்டான். சிலோன் ஜனங்கள் வீரர்களல்ல; வலியற்ற பயங்காளிகள். அவர்கட்கு வீரர் வேண்டியிருக்கும்போது துருக்கசேனையை யமர்த்துகின்றனர்.

சாக்கியமுனி புத்தரும்[3] படிம வழிபாடும்

சிலோன் தீவில் ஓருன்னதமான மலையிருக்கிறது; அது செங்குத்தாகச் செல்வது; மிக்கஉயரமுடையது; அங்கு ஒருவரும் செல்ல இயலாது; அதற்

1இலங்கைத் தீவு.

2அந்தமான் தீவு.

3இவருடைய அளவெல்லாம் அதிகமாகவே யிருக்கின்றது. ஆயினும் இலங்கைத் தீவி லொருபகுதி நீரில் ஆழ்ந்துவிட்டதென்ற செய்தியைப் பலருங் கூறுகின்றனர்.

4அப்பொழுது ஆண்டவன் பராக்கிரமபாகு III. இவன் 1267 முதல் 1301 வரை அரசாண்டான். ஜெயந்தன் என்பது பராக்கிரமன் என்பதின் பரியாயமாக விருக்க வேண்டும். இதுவே சேந்தமன் என்று மருவியது போலும்.

1ஓடொரிக் பாதிரியாரும் இதே விதமாகக் கூறுவர்.

2கிரேட்கான் (Great Khan) என்று இவரை யாத்திரிகள் வழங்குகின்றனர். சீனவில் கிலோனி என்று பெயருடைய பெரிய மாணிக்க மொன்றிருப்பதாகச் சரித்திரம் கூறும்.

3Sagamoni Borcan என்று எழுதியுள்ளார். இவ்வாறே இந்திய நாட்டுப் பெயரெல்லாந் திரித்துக் கூறப்படுகின்றன.

காக மலை நடுவில் இரும்புச் சங்கிலிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளி னுதவியாலேயே உச்சிக்கு ஏற வேண்டும்.[1] நமது முதல்பெற்றோரான ஆதமின் கல்லறை இருப்பதாகத் துருக்கர் கூறுகின்றனர். படிம வழிபாட்டினர் சாக்கியமுனி புத்தரின் கல்லறையிருக்கிறதென்றும், அதற்கு முன்பு விக்கிரகங்கள் கிடையாவென்றுங் கூறுவர். அவரை மக்களுட் பெரியாராகவும், உண்மை ஞானியாகவும், அவர்களுடைய கொள்கைப்படி உருவகஞ் செய்யப்பட்டவரில் முதல்வராகவும் கருதுகின்றனர்.

அவர் ஒரு பெரிய திரவிய சம்பன்னனான அரசனது குமாரர். அவ்விளவரசர் பரிசுத்த குணமுடையவராக விருந்தமையால் உலகப் பற்றற்றவராக விருந்ததோடு இராச்சிய பாரமும் வேண்டாமென மறுத்து விட்டார். அரசன் தன் குமாரர் இராச்சிய விஷயங்களிற் றலையிடாமலும் கவலைகொள்ளாமலு மிருப்பதோடு ராஜரீகமும் வேண்டாமென்றது கண்டு மிக்க கவலையடைந்தான். முதலில் மிக்க செல்வமும் அதிகாரமும் தருவதாகக் கூறியும் பின்னர் இராச்சிய பாரத்தையே வகிக்க வேண்டியும், அவர் ஒவ்வாதது கண்டு அரசன் மிகத் துக்கப்பட்டான். பின்னர் தனியாக ஓரரண்மனை கட்டி, அதனில் பல சேடிகளை வைத்து அரசிளங் குமாரரைத் தம் வயப்படுத்தி உலகப் பற்றுடையவராகச் செய்ய ஏற்பாடு செய்தான். அதனிலும் ஒன்றும் பயன்படவில்லை. அவ்வாறிருக்கையில் ஒரு நாள், அவர் சவாரி போகையில் ஓர் இறந்த பிணத்தைக் கண்டார். அதுவரை அவர் இறந்தவர், வயது முதிர்ந்தோர், பிணியுடையோ ரொருவரையுங் கண்டதே யில்லை. அவர் பிணத்தைக் கண்டவுடன் திடுக்கிட்டார். அப்பொழுதுதான் அவர் மக்கள் மரிப்பதுண்டெனக் கண்டார். பின்னர் சிறிது தூரஞ் சென்றவுடன் வயது முதிர்ந்த கிழவனொருவன் நடக்க மாட்டாது தள்ளாடுவதைக் கண்டார். அவனிடஞ் சென்று விசாரிக்கையில் வயது முதிர்ச்சியால் இவ்வாறு துன்புறுவதாகச் சொல்லக் கேட்டார். இதனைக் கேட்ட பின்னர் அவருக்குக் கலக்கம் அதிகமாயிற்று. அரண்மனை திரும்பி யோசனையி லாழ்ந்தார். நடுநிசியில் ஒருவருமறியாது அரண்மனையை விட்டு வெளிச் சென்றார். சென்றவர் பிறப்பிறப் பில்லாதவனாகிய கடவுளைக் காண முயற்சித்தார். இயேசுநாதரைப் போலப் பரிசுத்த வாழ்வு வாழ்ந்து உயிர் விட்டார். இதனை யரசனுக்கு அறிவித்தபோது அவரைப் போன்று பொன்னாலொருருச் செய்து மக்களை வணங்கும்படி செய்தான். மக்களெல்லோரும் அவரைத் தெய்வமென்று வணங்கினர்; இன்றும் அவ்வாறே கூறுகின்றனர்.

பின்னும் அவர்கள் சாக்கியமுனி எண்பத்து நான்கு தடவை பிறந்திறந்தா ரென்கின்றனர். அவர் மனிதனாக விருந்து இறந்ததும் பசுவாகப் பிறந்தனர்; இறந்து குதிரையாகப் பிறந்தார்; இவ்வாறு எண்பத்து நான்கு பிறவி யெடுத்தார். முடிவில் தெய்வமானார். அதனால் அவரையொரு பெரிய தெய்வமாகக் கொண்டாடுகின்றனர். இவரது படிமமே முதன் முதலாகச் செய்யப்பட்டதென்றுங் கூறுவர்; இந்த முதற் படிமத்தினின்றும் பல உண்டாயின. இது ஸிலோனில் நடந்தது.

கிறிஸ்தவர் காலிஷியாவி லுள்ள ஜேம்ஸ் ஞானியாரைக் காணப்போவது போன்று படிம வழிபாட்டினர் நீண்ட நாட் பிரயாணஞ் செய்து யாத்திரையாக வருகின்றனர். இதுபொழுது கூறிய கதையிலுள்ள அரசன் ம[illegible]னென்று அவர்கள் கூறுகின்றனர். அங்குள்ள பற்களும், கேசமும் அவருடையனவென்றும், அங்கு காணப்படும் தட்டு அவர் குடித்த தட்டு என்றுங் கூறுகின்றனர். அவர் பெயர் சாக்கியமுனி புத்தர் அல்லது சாக்கியமுனி

[1] இதனைச் சமனொளி மலையென்று கூறுவர்.

ஞானியென்றுங் கூறுகின்றன. துருக்கர்கள் தமது முதல் பிதாவான ஆதாம் இறந்து அடக்கஞ்செய்த கல்லறை அவ்விடமிருப்பதாகக் கூறுகின்றனர். பற்களும், மயிரும், தட்டும் அவருடையன வென்றுங் கூறுகின்றனர்.

அவை யாருடையன வென்பது கடவுளே அறிவர்; ஆயினும் நமது ஆகமப்படி ஆதாமின் கல்லறை அவ்விடத்தில்லை. அந்தப் பெரிய கான் (சீன சக்கரவர்த்தி) முதற் பிதாவின் பற்கள் முதலாயின இங்கிருப்பதை யறிந்து அவற்றைப் பெற்றுவரும்படி ஒரு தூது கி. பி. 1284-ல் அனுப்பினர். தூது கோஷ்டியினர் நாட்டுவழியாகவும் கடல்வழியாகவும் பிரயாணஞ் செய்து இலங்கையை அடைந்து அரசனைக் கண்டனர். அவனது உத்தரவுப்படிப் பற்களும், மயிரும், தட்டும் பெற்றுத் திரும்பினர். அவர்கள் இவற்றோடு வந்ததைக்கேட்ட சீன சக்கரவர்த்தி வெகு ஆடம்பரத்தோடு அவற்றை வரவேற்றனன். அந்தத் தட்டினுலே ஒருவருக்கு அன்னமிட்டால் அது ஐந்து பேருக்காகுமென்று சக்கரவர்த்தியே கூறியிருக்கின்றார். சீனசக்கரவர்த்தி வெகு திரவியஞ் செலவழித்து அவைகளை யடைந்த விதத்தைக் கூறினேன். அவை அவ்வரசன் மகனுடைய அடையாளங்கள்.

அங்கமனின் தீவு[1]

அங்கமனி னென்பது ஒரு பெருந் தீவு. அந்நாட்டுக்கு அரசனில்லை. மக்கள் படிம வழிபாட்டினர்; அவர்கள் விலங்கினுங் கேடானவர்கள். இந்த அங்கமனின் தீவிலுள்ள மக்களெல்லோரும் முகம், பல், கண்ணில் நாயைப் போன்றவர் என்று நான் உறுதி கூறுவேன். அவர்கள் வேட்டை நாயைப் போன்றவர்கள். அங்கு வாசனைப் பண்டங்கள் சிறிதளவுண்டு; ஆயினும் அவர்கள் கொடியவர்கள்; தங்களினத்தாரைக்கொன்றுதின்னுவிடினும் தங்கைக் ககப்பட்ட பிறரைக் கொன்று தின்றுவிடுவர். அவர்கட்கு ஊன், அரிசி, பால், பழவர்க்கங்கள் உணவுப் பொருளாகும்.

நக்கவரம்

சாவகம், இலாமுரி நாடுகளை விட்டதும் வடபுறமாக 150 கட்டை சென்றதும் இரண்டு தீவுகள் காணப்படுகின்றன; அவற்றுள் ஒன்று நக்கவரம். இந்தத் தீவில் உள்ள ஜனங்களுக்கு அரசனில்லை; அவர்கள் விலங்குகளைப் போன்றவர்கள். ஆடவர் பெண்டிர் எல்லோரும் நிர்வாணிகள்; படிம வழிபாட்டினர். அங்கு விலை உயர்ந்த மரங்களிருக்கின்றன. செஞ்சந்தனம், தென்னை, கிராம்பு, சப்பங்கி போன்ற வாசனைப் பண்டங்களு முண்டு.

[1] அந்தமான் தீவு.

ரிக்வேதம் (தமிழில்)

(மாதாந்தரப் பத்திரிகையாக ரிஜிஸ்தர் செய்தது)

ரிக்வேதம் தமிழில் 64 மாதங்களில் மாதம் ஒரு அத்தியாயமாக 1933ளு ஏப்ரல் மாதத்திலிருந்து வெளிவந்துகொண் டிருக்கிறது. எட்டு மாதப் பாகங்கள் கொண்டது ஓர் அஷ்டகம் (வால்யம்). எட்டு அஷ்டகங்கள் கொண்டது ரிக்வேதம் முழுவதும். ஒவ்வோர் அஷ்டகத்தின் முடிவிலும் வடமொழி மூலம் வெளிவரும். சந்தா விவரம்:

பெதர்வெயிட் காகிதப் பதிப்பு	8 மாத பாகங்களுக்கு ரூ 8—0—0
கிளேஸ் காகிதப் பதிப்பு	8 மாத பாகங்களுக்கு ரூ 4—0—0

காரியதரிசி, வேதப்ரவசன மந்திரம்,

27, முத்து முதலிவீதி, இராயப்பேட்டை, சென்னை.

சுந்தர சுலோசனா

[திரு. தி. ர. சாரங்கபாணி, எம். ஏ.]

(தொடர்ச்சி)

இதழ் 10.

தனதில்லம் அணுகுங்கால் ஆங்கு நின்றிருந்த இருவரைக் கண்டதிலிருந்து ஜயகுமாரன் ஆழ்ந்த சிந்தனையுளாழ்ந்தான். தயாநந்தலாலும் போலி வேடம் பூண்டு உலகை மயக்கித் திரியும் புறவேடதாரியாகிய சாமியாரும் ஒன்றி, இக்கபட நாடகத்தை ஒருங்கே நடித்துள்ளார்களெனத் தான் எண்ணியது தவறென அவனுக்குப் புலனாயிற்று. சத்தியநாதன் கூறிய அடையாளங்கள் உண்மையாயிருக்குமேல், அவனறைந்த சிறந்த அடையாளங்களையே தான் தயாநந்தலால் என்னும் மார்வாடியின் வதனத்துக் கண்டமையானும், தானாகவூகித்துணர்ந்த பல மெய்ம்மைகளானும் ஜயகுமாரன் தயாநந்தலாலே சச்சிதாநந்த சுவாமிகள் என்பது ஓர்ந்தான். இவ்வுண்மையைக் கண்டறியத் தான் கொண்ட சிரமமெல்லாம் கள்ள வேடம் பூண்ட கள்ளனின் சூழ்ச்சியால் அவலமாய்விடின் என் செய்வதென ஏங்கினான். இனிக்காலதாமதஞ் செய்வது தவறென அவனுக்குத் தோன்றியது. எவ்வகையானும் "மைபொதி விளக்கே யென்ன மனத்தினில் கருப்பு வைத்து"த் திரியும் மடாதிபதிகளின் பரம்பரையில் தோன்றிய பெரியார்களுள் ஒருவராகச் சிறக்க விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சச்சிதாநந்த சுவாமிகளின் இன்னுரையை மெய்யெனக்கொண்டு, தெய்வப்பித்துப் பிடர்பிடித்துந்த, இறைவனைக் காணுமோர் ஆசையினால் வீண்பழியைத் தாங்கவுந்துணிந்த சண்முகசுந்தரப் பிரபுவையும் குற்றமறியாத கள்வனெனக் கருதப்பெற்ற மோகனசுந்தரப்பிரபுவையும் அக்கள்ளனின் கரங்களினின்றும் மீட்டு சாரதாவுக்கும், சந்திரசேகரப்பிரபுவுக்கும் முக்கியமாக சுலோசனைக்கும் இன்பம் நல்க எண்ணிய ஜயகுமாரன் மோகனசுந்தரமும், சண்முகசுந்தரமும் தயாநந்தலாலாகவும் ஸ்ரீலஸ்ரீ சச்சிதாநந்தசுவாமிகளாகவும் நடித்து உலகை மயக்கித்திரியுஞ் சண்டாளனாகிய புறவேடதாரியிடமிருக்கின்றார்கள் என்பதை அவன் ஒருவாறுணர்வானாயினும் அவர்களின் இருப்பிடத்தை உணரவியலாது வாடினான். ஏழைமக்கள் பெரிதும் போற்றிநாடும் மடத்தினுள்ள பூஜை அறையின் எதிரிலிருந்த ஓர் அறையிலிருந்து யாரோ ஒருவர் மனங்கசிந்து பாடினார் என சத்தியநாதன் கூறிய உரைகளை அவன் மறந்தானல்லன் எனினும் நேரில் தானாகக் கண்டுணரும் வரை எதனையும் மெய்யெனக் கொள்ளும் இயல்பை ஜயகுமாரன் உடையனல்லன். ஆதலான் தானாகவே நேரில் சண்முகசுந்தரத்தின் இருப்பிடத்தையும் மோகனசுந்தரத்தின் இருப்பிடத்தையுங் கண்டறிதல் வேண்டுமெனத் தீர்மானித்தான். தன்னுடைய விரோதி இடைவிடாது தன்னைக்கவனித்துவர, எம்முறையில் இதனைக்கண்டறிவதென அவனுக்குத் தோன்றவில்லை. மாறுவேடம் பூண்டு செல்வதே தகுந்தவழியென அவனுக்குத் தோன்றியதெனினும், அவர்களுடைய கரத்தில் சிக்கிக்கொண்டால் காரியங் கெட்டுவிடுமென அவன் தயங்கினான். ஆனால் காலதாமதஞ் செய்யின், தன்னுடைய செய்கைகளைக் கவனித்துவரும் சாமியார் அவர்களை ஒளித்துவைத்துவிடின் வீண்கஷ்டத்திற்குள்ளாக வேண்டுமாதலால் காலதாமதஞ் செய்யலாகாது என அவனுக்குத் தோன்றியது. சிறிது நேரம் ஆழ்ந்த சிந்தனையிலிருந்து பின்னர் சத்தியநாதனை விளித்து, "சத்தியநாத! நீ எனக்கு சச்சிதாநந்தசுவாமிகளின் முகத்திடைக் கண்ட அடையாளங்களைப்பற்றிக் கூறியது உனக்

நினைவிருக்கிறது அல்லவா ?'' என்று வினவினான்.

"ஆம் ஐயா"

"இன்று நான் மடத்திற்குச் சென்று சில உண்மைகளைக் கண்டறிய எண்ணியுள்ளேன். இப்பொழுதோ மணி பத்தாகிவிட்டது. இங்கிருந்து நான் பன்னிரண்டு மணிக்குப் புறப்பட்டுச் செல்லத் துணிந்துள்ளேன். நீ இங்கு எனக்காகக் காத்துக் கொண்டு இரு. இரண்டு மணிக்குள் சரியாக நான் இங்கு வந்துவிடுவேன். நான் ஒருகால் இக்கபட சந்யாசியின் கரத்தில் சிக்குண்டாலும் அது சாதாரண காரியமேயாம். நாம் அவனைக் கவனித்துத் திரிவதுபோல் அவனும் நம்மைக் கவனித்து வருகின்றான். எனவே, இரண்டடிப்பதற்குள் யான் வரத்தவறின், நீயுடனே ஸ்டேஷனுக்குச் சென்று கேசவனை இருபது ஆட்களுடன் மடத்திற்கு வருமாறு கூறி உடனழைத்துக் கொண்டு வந்து சேர்த்துப்பின் நடப்பதைக் கவனித்துக் கொள்வோம். நான் கேசவனுக்கு ஒரு கடிதம் வரைந்து மேஜையின் மீது வைத்து விட்டுச் செல்கின்றேன்.''

"ஐயா ! நானும் உம்முடன் வந்தால் நான் கவலையற்றிருப்பேன்.''

"சத்தியநாத! நீ இங்கிருந்தால் எனக்கொரு ஆபத்துவரினும் உடனே கேசவனுடன் அங்கு வந்து என்னை மீட்க இயலும். நீ என்னுடன் வந்து பயனென்? இருவரும் திருட்டுச் சாமியார் கரத்தில் சிக்கி அல்லலுறுதல் வேண்டும்.''

"ஐயா! அந்த சுவாமிகள் மீது நீர் வீண் சந்தேகங் கொண்டுள்ளீரெனவே யான் எண்ணுகின்றேன்.''

"சத்தியநாத! நீ'' உண்மையையுணர்ந்தால்....................

"ஐயா! நீர் கூறுவதிலிருந்து யானறியாச் சில உண்மைகளை நீர் கண்டறிந்துள்ளீர் என்பது விளங்குகின்றது.

"ஆம். சத்தியநாத ! நான் ஊகித்துணர்ந்த உண்மைகளை இப்பொழுது கூற அவகாசமில்லை. எனவே, நான்சென்று வருகிறேன். நீ மிகவும் ஜாக்கிரதையாக மணியைக் கவனித்துக் கொண்டிரு.''

"ஐயா! அப்பொழுது அந்தச் சாமியார் வேடதாரியென விளங்குகின்றது புறவேடம் பூண்டு திருடித் திரியும் அப்பேயனின் கரத்தில் நீர் சிக்குண்டால் உம்மை அவன் கொல்லவும் தயங்கான்''

"சத்தியநாத! புகழ் என்னும் கனி ஆபத்தென்னும்மரத்திலன்றோபழுத்து விழுகின்றது? மேலும் நியாய வரம்பு மீளாது நம்மால் இயன்ற தொண்டை இறைவனுடைய தொண்டாகக் கருதி நாம் இவ்வுலகிடை இயற்றலே, நம்முடைய கடனாகும். போலி வேடம்பூண்டு, இறைவனையும் இறைவனுக் கிசைந்த பக்தர்களையும் வாட்டித் திரியும் இப்பேயனைப் பிடித்து உண்மையை உலகிற்கு விளக்கி, தகுந்த தண்டனையை இவன் அடையுமாறு செய்தலே தமிழகத்திற்கு, மதத்தின் மாண்பையுந் தூய்மையையும் வேருடன் கெடுக்கத்தோன்றிய இக்கபட நாடகப் பேயர்களால் இடிப்புண்டு நச்சிற்கிடந்து அல்லலுறாஉம் சமயத்திற்கு, நாம் செய்தற்குரிய பெருந் தொண்டாகும். அஃதே இறைவனுடைய அரும்பணியுமாகும். அதனால் யான் என்உயிரை இழந்திடினும் யான் அதற்காக அச்சமுங் கவலையும் உறுகின்றேனல்லை. ஆனால், தர்மந்தலைகாக்கும் என்னும் மெய்யுரையை நான் மறக்கவில்லை. இறைவன்றன் இன்னருள்உடையோன் இத்தகைய போலி வேடதாரிகளின் சதியாலோசனைக்குச் சிறிதும் அஞ்சவேண்டுவதில்லை. எனவே சத்தியநாத! என்பொருட்டு நீ சிறிதுங் கவலையுற வேண்டாம். ஆண்டவனருளால் நான் இறுதியில் வெற்றி பெறுவது திண்ணம்.''

"ஐயா! உபுதிஷ்டம்போல் சென்றுவாருங்கள். நான் கவலையுடன் நீர் கட்டளையிட்டதுபோல் செய்வேன். ஆண்டவன் உம்முடைய பக்கத்துணையாய் நிற்க.''

உடனே ஜயகுமாரன் கேசவனுக்கு ஒரு கடிதம் வரைந்து மேஜையின்மீது வைத்துவிட்டு தன தறைக்குச் சென்று

சிறிதுநேரம் யோசித்தான். ஒருகால் தான் கபடசந்யாசியின் கரத்தில் சிக்கினுல் தான் உயிருடன் இருப்பது அரிதாகும். ஆதலின் தான் அறிந்த உண்மைகள் தன்னுடன் மடியுமாதலான் தானறிந்தவைகளையெல்லாம் ஒருகடிதத்தில் விளங்கமாக எழுதினுன். முதன்முதலில் சந்திரசேகரப் பிரபுவின் தொடர்பிலிருந்துகடிதம் எழுதும்வரை தான்கண்டறிந்த துப்புகளையும்அத்துப்புகளின் உதவியான் கண்டறிந்த உண்மைகளையும் விளக்கமாக எழுதிக்குற்றவாளியைவிளக்கித் தனக்குப்பின் கேசவனிடமே, தனக்கு ஓர் இன்னல் நேரிடின், அந்தக்கேசை சந்திரசேகரப்பிரபு அளிக்கவேண்டுமெனவும், குற்றவாளியைக் கண்டுபிடித்து உண்மையில் மேலோதிய கபடசந்யாசியின் சூழ்ச்சியால் வீண்பழிகளைத் தாங்கிவாடும்சண்முகசுந்தரப் பிரபுவையும் மோகனசுந்தரப்பிரபுவையும் அவனுடைய காவலினின்றுமீட்டு அவர்களைப்பிரிந்துவருந்தும் சாரதாவுக்கும் சுலோசனைக்கும் இன்பத்தையும் சந்திரசேகரப் பிரபுவின் ஓயாவாட்டத்தையும் விட்டு அவருக்குக் களிப்பையும் அளிக்கத் தான் செய்யும் முயற்சியில் தான் உயிர்விடின் கேசவனே அக்கபட சந்யாசியைப்பிடித்து தண்டிப்பதற் கேற்றவனெனவும் முடிவுகட்டி வரைந்து அக்கடிதத்தை ஓர் உறையிலிட்டுச் சந்திரசேகரப் பிரபுவின் விலாசத்தை மேல் வரைந்து "சத்தியநாத! இக்கடிதத்தை நான் வரத் தவறின், நாளைக் காலையில் பத்துமணிக்குமேல் நேராக என்னுடைய வண்டியில் சென்று சந்திரசேகரப் பிரபுவின் கரத்திலளித்திடு" எனக் கட்டளையிட்டுத் தன்னுடைய அறைக்குச் சென்றான்.

இறைவன் மாட்டு ஜயகுமாரனுக்கு இளமையிலிருந்து வளர்ந்தோங்கிய பக்தி தான்கொண்ட எண்ணம், நிறைவேறுதற்காக அறையுள் சென்றது; சிறிது நேரம் இறைவனருளை வேண்டுமாறு தூண்டியது. பின்னர் வெடிகுண்டின் வேகத்தைத் தடுத்துத் தன்னுயிரைக் காக்கவல்ல இருப்புச் சங்கிலிகவசமொன்றை உள் அணிந்துமேல் ஓர் எளியவன் போலும் வேடம் பூண்டு இரண்டு சிறு கைத்துப்பாக்கிகளை ஒளித்து வைத்துக் கொண்டு, ஒரு கரிய அங்கியால் தன்னை மூடிக்கொண்டு அறையிலிருந்து வெளிப் போந்தான். அதே நிமிடம் மணியும் பன்னிரண்டடித்தது. அவனுடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சத்தியநாதன் ஓடியுஞ்சென்று அவனடியில் விழுந்து அவனுடைய கால்களைப் பற்றிக்கொண்டு, "ஐயா சென்றுவாருங்கள்; இறைவனருளால் நீர்வெற்றி பெறுவது திண்ணம்"மென மொழிந்தான். அவனுடைய குரலோசை பெரும்மனவேதனையை விளக்கியது. அவனுடைய கண்களில் நீர்ததும்பிற்று. ஜயகுமாரன் அவனை எழுப்பி அவனுடைய முகத்தை உற்று நோக்கினுன். ஜயகுமாரனுடைய முகத்தில் புன்னகை தாண்டவமாடியது. கண்கள் ஒளியுடன் விளங்கின. சத்தியநாதனின் கண்களில் நீரைக் கண்டதும் ஜயகுமாரன் அவனைக் கட்டியணைத்து "சத்தியநாத! எத்தனையோ கேசுகளில் உயிரை மதியாது கள்ளரைப் பிடித்து வாட்டிய நீயும் பெண்மக்களைப் போலும் கண்ணீர் விடுதல் முறையோ! சத்தியநாத! கவலையுறுதே. உன்னை யான் என்னுடைய பணியாளனுகப் பெற்றது என்னுடைய பாக்கியமேயாகுமென யான் பன்முறை கூறியுள்ளேன். உன்னை என்னுடைய துப்பறித் தோழனுகப் பெற்றயான் இக்கபட சந்யாசிக்காகச் சிறிது மஞ்சவில்லை. வெற்றியுடன் இன்று திரும்புவேன். நாளை அவனைக் கைதியாக்குவேன். நான் சென்று வருகின்றேன்" நான் கூறியவைகளை மறவாதே. யானெழுதிய இருகடிதங்களையும் இருப்புப் பெட்டியில் முதலில் வைத்துப் பூட்டிவிடு. அக்கடிதமொன்றில் பெரும் இரகசியம் அடங்கியிருக்கிறது. நான்சென்று வருகிறேன்.'

சென்று வாருங்கள் ஐயா!

நமது சிந்தனை

[திரு. சி. சதாசிவனார்]

IX

மெய்

இறையே உள்பொருள் — சத் — உண்மை.

"ஈறிலாத நல்லீசன் ஒருவனை," இவன், "படைப்போற் படைக்கும் பழையோன். படைத்தவை காப்போற் காக்கும் கடவுள். காப்பவை கரப்போன்" அவனைத் தவிர வேறு ஒரு சக்தி யாண்டும் இல்லை.

ஐம்பெரும் பூதங்களும், அவற்றின் சேர்க்கையால் உருக்கொளும் கல், தாவரம், ஊர்வன, பறப்பன, நீர்வாழ்வன மா, மக்கள், இன்னவும் பிறவும் செறிந்த இப்பூதலமும், தண்மதி தபனன் முதலிய கோட்களும், வான்மீன்களும், இவை இடங்கொண்டிருக்கும் பெருவெளியும்* தோற்றத்துக் காரணமாகிய சத்தியே இறைவன். இப்பருமை விகாசத்தினது உடலாக, உயிராக, அறிவாகப் பிறவாக இயங்குவது இவ்வொருசாரமே. இவ்வாதாரசக்தி ஊடேஓடாத பொருள்கட்கு ஈண்டு இருப்பு இல்லை.

அவனன்றி ஒன்றில்லை. இறை யாண்டும் நீக்கமறச் செறிந்த நிறைவு; இங்கு அங்கு என அறுதியிடமுடியாத எங்கும் நிறைந்த பேரொளி;

"இருநிலனாய்த் தீயாகி
நீருமாகி இயமானனாய்
எறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய்
ஞாயிறாகி ஆகாசமாய்"

இப்பிரபஞ்சமாக விரிந்தும்,

"கல்லாகிக் களராகி"

அறிவில் பொருள்களாய்த் திண்ணெனக் கிடந்தும்,

"புல்லாகிப் புதலாகிப் பூடுமாகித்"

தாவர உலகமாக விளைத்து பரந்தும்,

"மாதா பிதாவாகி மக்களாகி"

மனிதர் கூட்டமாக வளர்ந்தும்,

"பெண்ணாகிப் பெண்ணுக்
கோர் ஆணுமாகி"

பால் வேற்றுமையிற் றிகழ்ந்தும்,

"ஊனாய் உயிராய் உணர்வாய்"

மக்களுள் ஒளிர்ந்தும்,

"நெருநலையாய் இன்றாகி நாளையாகி"

முக்காலமாக நீண்டும், பின்னுங் கட்டுற்றமனம் எனனென்ன அறியுமோ அவ்வளவு மாகியும் மனஉணர்வைக் கடந்த,

"அப்பாலுக்கு அப்பால்" ஆகியும், இன்னும் "எத்தனையோ கவடு விட்டு"ப்பரந்து விரவிய பெருமை, அணுவுள் அவனும் அவனுள் அணுவும் கணுவறநின்ற கலப்பு.

கடவுள், உயிர், அறிவு, அருள் வண்மை இன்ன பிறவற்றோடு கூடிய ஒரு தோன்றும் பொருள் அல்ல; உலக அறிவில் மட்டுப்படாத நுண்ணிய தோன்றாப் பொருள்; சிந்திக்கரிய பேரன்பு; நலியா வன்மை; முடியா நன்மை; இன்ன நலன் பலவற்றினீட்டம்; மாற்றமனங்கழிந்த நிலையில் மட்டும் உணரக்கூடியகுணசாரம்.

இறைவன் எல்லாம் செய்யவல்லதெய்வம். வரம்புடை மனித மனம் நினைக்கவுமரிய அற்புதங்கள் பல அவன் முன் நிகழும். அண்டங்கள் பலவும் சாந்துபோல்இளகி அவனது மனப்படி உருப்படும்; விச்சின்றி நாறு ஆகும்; நரிபரியாகும்; துஞ்சியன புத்துயிர் பெற்றெழும். இதுசெயலரிது என்பது அவனிடம் இல்லை:

அவனது படிவம் முற்றறிவு; முக்காலத்தும் யாண்டும் விரவிய பேரறிவு. அவனியில் பற்பல துறைதொறும் விளக்கம் பெறும் அறிவுகள் இம்முழு

அறிவினது சிறுசிறு கூறுகளாகும். இதன் ஒருசிறு பாகம் நம் ஒவ்வொருவரது இதயத்திலும் மறைந்து உறைகின்றது. அமையம் வந்துற்றபோது நம்மகத்தில் ஒளிரும் இச்சிறு திவலையே நமக்கு எல்லா உண்மைகளையும் விளக்கும் பேராசிரியனாக ஆகி அமைந்து நம்மை அறிவு மாகடலிற் செலுத்தி அறிவு மயமாகவும் ஆக்கும். இவ்வாரியிற் குடைந்தாடுங்கால் ஈண்டுச் சம்பவிக்கும் எல்லாவற்றிற்குங் காரணங்களும், நமக்குறும் தீங்கைத் துடைக்க வல்ல திறனும், நடந்தன நடப்பன இவற்றைத் தெளியும் ஆற்றலும் தாமே நம்மகத்தே வந்தெய்தி, நமக்கு ஒரு நவசக்தியை - புத்துயிரை - அளிக்கும்.

அவன் இன்ப வடிவினனும் ஆவன்; இன்புடை ஒருவனல்லன் ; இன்பேயாயவன்; எங்கு நிறையுந்தன்மையனாகவே யாண்டும் ஆரமுதப் பெருக்கமாக உறைபவன் ; இடையறாத ஆனந்தமாய் என்றும் இயங்குபவன். இது ஈடு எடுப்பு அற்ற இன்பு நமது உணர்வில் உறுத்திய காலை இது எவ்வண்ணமிருக்கும் என்பதைப் பெரியார்கள் ஒருவாறு வருணித்துப் போந்தனர். தீஞ்சுவைக் கனிகளது இறுத்த சாற்றில், சருக்கரையுங் கற்கண்டும் பொடித்துக் கொட்டி, கலப்படமில்லா நறுங்கோற்றேன் வடித்துக் கொடுத்து, ஆவின் இன்னமுதும் தெங்கின் தீம்பாலும் வேண்டுமட்டும் விட்டு, உயர் வாதாம் இடியுங் கூட்டி, புத்துருக்கு நெய் குறைவறப் பெய்தட்டு, சிறு சூட்டிலிறக்கிச் சுவைக்குங்கால் தோன்றும் இன்பத்திற்குத் தோற்காது மேலெழும் இறை இன்பு.

அன்பும் அவனது உடலம். அன்பே சிவன். ஆண்டவன் உயிர்கள் மாட்டுக் காட்டும் கழிவிரக்கம் இயற்கையோடியைந்த செம்மை வாழ்வு நடாத்தி அதனைத் துருவும் செம்மல்கட்குச் செவ்விதிற் புலனாகும். மன்பதையில் மனமுருக்கும் நிகழ்ச்சிகள் பலவும் இவ்வன்பின் மலர்தலாக ஆவதை அவர்கள் உணர்வார்கள். நண்பனது நேயமும், ஆயினது வாஞ்சையும், தம்பதியின் துகளற்ற காதலும், பிறவும் அப்பேரன்பினது சிறுசிறு துளிகளாக அவ்வப் பாத்திரங்களில் குறைந்தும் நிறைந்தும் ஒளிர்வன ஆகும்.

அவனியை உற்று நோக்குறின், இறைவன் எங்கும் நிறைவாக (Abundance) வதிதலைக் காண்போம். உடல் ஓம்புதற்கு இன்றியமையாத காலும் நீரும் உண்பொருளும் பிறவும் மகன் உறைவிடம் எங்கணும் செறிந்திருத்தலை உணர்வோம். உயிர்கட்கு இங்கு என்னென்ன வேண்டுமோ அத்தனையும் ஆண்டவன் எங்கும் பொறித்திருக்கின்றான் என்பதில் அவனது பேரன்பும் தெள்ளிதிற் றெரிக்கும். இந்நிறைவும் குறைவுபடா நிறைவு. உயிர்கள் எவ்வளவு காலம் உயிர்த்துக் கொண்டிருந்தாலும் வளி குறைவுபடுமோ? எத்துணை காலம் நீர் அருந்திக் கொண்டிருந்தாலும் அது இல்லாமற் போகுமோ? உண்டிப் பொருள்களும் பிரதி வருடமும் குறைவறப் பெருகிக் கொண்டே போவது கண்கூடு. இறைவன் எங்கும் வளரும் குறைவிலா நிறைவு தெரியின், இவ்வண்டத்தினூடே இலங்கும் ஒழுங்கு நன்கு புலனாகும். "இல்நுழைகதிரின் துன் அணுப்புரைய நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த" கோளங்கள் பலவும் ஒன்றை ஒன்று பற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றன. இவையாவும் தத்தமக்குரிய நெறியே சிறிதும் பிறழாது இயங்கி இப்பேரண்டத்தை நிறுவுகின்றன. இவைதம் ஊடே நின்று ஆட்டுவிக்கும் இறையோனது ஆணையினின்று இறையேனும் தவறுமாகில், இவை பலவும் ஒன்றோடொன்று மோதி எத்தகைய கலாம் விளைக்கும் என்பது சிந்திக்கரியது. இராப்பகல், கார் கோடை இன்ன பிறகால அவைகள் தத்தமக்குரிய போதில் என்ன ஒழுங்குடன் தோன்றி மறைந்து சுழன்று கொண்டிருக்கின்றன. இவ்வொழுங்கும் இறைவன் பண்பு அல்லது இறைவனே.

அவன் சுகப்பெருவாரி; புன்கண் நீக்கி உடல் நலன் நல்கும் ஒருவன் மட்-

டும் அல்லன்; பிணி அணுவும் இல்லாக் கரைகாணா மாபெரும் இன்பப் பெருக்கம். உடற் குறைகளையும் உயிர்க்கறைகளையும் ஒருங்கே துடைக்கவல்ல சுடர்க்கொழுந்து.

நீதி, அமைதி, மன்னிப்பு, முருகு, தனக்கென வாழாமை, இன்னும் என்னென்ன நல்லியல்புகள் நாம் அறிவோமே அத்தனையும் ஆண்டவன் இயல்கள் அல்லது அவனே.

"எல்லாம் செயவல்ல தெய்வம் எங்கு நிறை தெய்வம் என்னுயிரிற் கலந்தெனக்கே இன்ப நல்குந் தெய்வம் நல்லார்க்கு நல்ல தெய்வம் நடுவான தெய்வம்"

"காரணமாந் தெய்வம் அருட் பூரணமாந் தெய்வம் செல்லாத நிலைகளெல்லாம் செல்லுகின்ற தெய்வம்."

"இருட்பாடு நீக்கி ஒளி ஈந்தருளுந் தெய்வம் எண்ணிய நானெண்ணியவாறு எனக்கருளுந் தெய்வம்.......... எனையும் சிவமாக்குந் தெய்வம்" எல்லாம் இறையே. இது மெய்.

மெய்யை மொழியாற் பகரவோ, வரிவடிவில் வரையவோ ஒல்லாது. மாற்ற மனங்கழிந்த ஒன்றன் பண்புகளைக்கட்டுடையகருவிகளால் எவ்வாற்றால் அளக்க இயலும்? கல்போல் திண்மையுற்றிருக்கும் நாம் மனந்தெளிந்து, ஆவிபோல் மென்மை யடைந்து நெருங்கியபோது வெற்றிப்பொதுங்கில் (Vacuum Space) காற்புகுமாறு, இவ்வியல்புகள் தாமே அகத்திற் புகுந்து உறுத்தும் போது தான் இறையை உணரப் பெறலாம்.

யாண்டும் விரவிய இந்நிறைவின் நாப்பண் நாம் வதிகின்றோம். ஆயினும் நம்மகத்துள் இறை உணர்ச்சி துலக்கம் பெறாமையால், நாம் அதன் தன்மைகளை உட்கொண்டு, தோற்றுவித்து, இன்பத் துய்க்க முடியவில்லை. தடத்தே கமலத்தருகில் உறைந்து, அதன் தெண் மதுவுண்டு களிக்க அறியாத தவளைகள் உறழ, நாம் நடலை உறுகின்றோம். நிறைவு, சுகம், இன்பம் இன்ன இவ்வனியிலேயே, இங்கேயே, இப்போதே நமக்கு இருக்கின்றன என்று நாம்உணரவில்லை. இவைகட்கு மாறாக ஒழுகாது இவைகளுடன் இயைந்த வாழ்வு நடாத்தின் - இறைவேறு நாம் வேறு என்ற புன்மை எண்ணம் கொள்ளாது, இறையும் நாமும் எப்போதும் ஒன்றே என உணர்ந்து ஒன்றுங்காலை - மாசற்று மனம்வெளுத்தபின் - மனதினின்றும் பொய்யாயின (Error Consciousness) போயினபின் - இத்தெய்வ இயல்கள் நம்மிடம் விளக்கமுறும்.

இவ்வொன்றற்கு முதற்படி, இறை எங்கும் உறைதல் பற்றி, அவன் இயல்கள் இங்கு இப்போது இருக்கின்றன என்று ஒப்புக் கொள்வதே யாகும். நமது பழக்கமான இன்மை எண்ணத்தை அழித்து, மனதில் யாண்டுமுள்ள இறை இங்கு இப்போது இருக்கின்றது எனநினைப்பதே துன்பவாழ்வினின்றும் நம்மைத் திருப்பி இன்ப வாழ்வைக் காட்டும் திருப்பம் (Turning Point.) கலைகள் இவ்வுண்மையை அறிவு கொளுத்தும். ஊன்றி உன்ன உன்ன, இந்நூலறிவு இதய உணர்வாக மாறித் திடமளிக்கும். கலையறிவு உள்ளொளியாக - உணர்ச்சியாக - மாறுவது தியானத்தின் வழி நடைபெறும்.

இரும்பாய் இறுகிய நிலத்தை, இரும்பினுங் கடிய ஏர்க்கொழுவினால் ஆழ உழுது, நீர்மைச் சேறாக்கி, அதில் வித்திட்டு நாறு செய்யுமாறு, எவ்வத் தடந்திரையால் எற்றுண்டு, தன்னயம் பெருகிக் குறுகிக் காழ்பட்ட பாழ்மனத்தின்வாய், பொறை நீர்பாய்ச்சி, அசைக்கஇயலாத மெய்நதியால் இதை ஆழக்கிளற, எறும்பூரக்கல்லுந் தேயும் எனும் முதுமொழிக் கிலக்காக, அத்திண் மனமுங் கரைந்துருகி நீர்மை பெற்று, ஆவியின் தன்மையுற்று, இறை இயல்கள் படியப் பெற்றுப் பெருகும்.

"தோற்றும் உலகே தேற்றம். அதன் இன்பே உறுபயன்" எனமயங்கும் தேறலார்இதயம் முற்றிலும்மாறி, இறையை ஓர்ந்து என்றும்கெடாத இன்பம் அடைதற்கு-சிவகதி பெறுதற்கு-அவன்

இயல்களை இடையறாது மனத்திருத்திச் சிந்தித் திருப்பதே ஒரு சிறந்த நெறி. நம் சிந்தனைப்படி நாம் ஆகின்றோம் அல்லவா ?

கன் மனங்கரைவது - சித்தந் தெளிவது-மெய்பெறும் உழவால் - தியானத்தால். ஆண்டவன் அருட்குணங்களைத் தனிமையில் அமர்ந்து, அமைதி எய்தி உன்ன உன்ன, இக்குணங்களை இதயம் உணர்ந்து தன்னியல்களாக ஏற்றுக் கொள்ளும் நாள் கடிதில் வரலாம். மெஞ்ஞான ஒளி அகத்துப் படிப்படிய துன்பம் பரிதிமுற்படு பனி என அருகி அருகி, நமது புறவாழ்வும் தூய்மையாக இனிமையாக மாறும்.

ஈரிரண்டு ஐந்து என ஒருவன் சொல்லின் உடனே தடங்காது, தயங்காது "அன்று; நான்கு" என்று அறைகூவுவோம். நமது இதயம் இம்மெய்யை உணர்ந்து விட்டதால் நமக்கு இதில் சிறிதும் ஐயப்பாடு இல்லை. அப்படிச் சொல்லும் போது இரண்டு இரண்டை நாம் ஒன்றும் புதிதாக நான்காக ஆக்குவதில்லை. அது எக்காலும் அப்படியே இருக்கின்றது. அவ்வுண்மையை நாம் உணர்ந்து விட்டதால், ஐந்து என்று பறையப்பட்ட அல்லது வரையப்பட்ட இடத்தில் அத்தவறை நான்கு என்று திருத்தி விடுகிறோம். இத்திருத்தமும் மிகஎளிதில் நடைபெறுகின்றது. இதை ஒப்ப, இறை உண்மையை நாம் இதய உணர்வாக அடைந்த அளவு, புறத்தே நிகழும் கலக்கத்தைத் துடைத்து, அமைதியை - இன்பை - நிலை நிறுத்த வல்லவர் ஆவோம்.

இரண்டும் இரண்டும் ஐந்து எனும் பொய்யனைய பிணி, வறுமை, கொடுமை, கலக்கம், வெகுளி, பொச்சாப்பு, அநியாயம், இன்னன்ன உணர்ச்சியுடைய ஒரு மெய்ஞானியினது வழியில் வந்தகாலை, அவன் "இல்லை; உள்ளது ஒன்றே; அதுவும் சுகம், நிறைவு, இனிமை, அமைதி, சாந்தம், நீதி" என்று உணர்ந்து ஓதுவானாக. அவனுக்கும் அவனை அண்டிய பிறர்க்கும் பிணியாதிய துன்பங்கள் தாமே அழிந்து பட்டு அவைகட்கு எதிரிடையான நன்மைகள் விகசிக்கின்றன. உண்மையினது வலியால், இறை எல்லாம் செய்ய வல்ல தெய்வம் ஆதலால், எங்கு மெய்யொளி காலுகின்றதோ, அங்குத்தானே தன்னியல்களுடன் எளிதாக வெளியாகின்றான். உலகத்திற் பிணைபட்டுள்ள குறுகிய நோக்குடையார்க்கு இன்ன சம்பவங்கள் அற்புதங்களாகத் தோற்றுகின்றன.

கூட்டல் பெருக்கல் வாய்ப்பாடுகளை இளஞ்சிறார்கள் மனப்பாடம் செய்கிறார்கள். இவைகளைத் தலைகீழ் ஒப்புவிப்பதைவிட வேறு ஒன்றும் அவர்கட்குத் தெரியாது. இதுபோலவே வெறும் நூலறிவுடையஒருவன் இயல்பும். அவன் இறைவன் இயலை நூல்களில் அறிந்தவாறு தருக்க நியாயங்களோடு வாதிட்டு நிலைநிறுத்துவான். கணிதங்களில்உள்ள கூட்டல் பெருக்கல் உண்மைகளைக் கண்டு சரியான விடை இறுக்க மாட்டாக் கணக்கறிவில்லாச் சிறுவர்களைப் போல, இன்னவனுக்கு, அக ஒளி இன்மையால், யாண்டும் உள்ள இறைவன் புலனாவதில்லை.

உயர் வகுப்புக்களில் மாணாக்கர்கள் கணக்குகள் போட்டுப் போட்டு அவைகளில் உள்ள கூட்டல் பெருக்கல்களைக் கண்டோ, அல்லது அவைகளை நுழைந்தோ விடைகாணக் கற்றுக் கொள்கின்றார்கள். அதைப்போல அறிஞன் அவனுக்கு வரும் அமையங்களில், நிகழ்ச்சிகளில், உறு உணர்ச்சிகளில் எங்கு உண்மை ஒளிர்கின்றது என்று ஊன்றி உன்னித் துருவிப் பார்த்தல்வேண்டும். உண்மையை இடைவிடாது சிந்தித்துக் கொண்டும் இருத்தல் வேண்டும். நமது இதயம் எங்கும் இறையைக் கண்டு அதை உண்மை என ஏற்றுக் கொள்ளும் காலம்வரை இவ்வுழவைச் செய்திருத்தல் வேண்டும்.

மனதில் எப்போதும் இறை எண்ணம் ஒன்றையே மறவாது உறுத்திக் கொண்டிருந்தாற்றான், எதிலும் அவனது இயலைக் காணல் கூடும். "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்

னையா தொருபோதும் இருந்தறியேன்'' என்று நாம் திடம் பெறக் கூற வல்ல இடமே மெய்ஞ்ஞான உணர்ச்சி உதயமாகும் நிலை; இறைமை உணர்த்தும் நன்னிலை; இதயம் உலகக்கட்டினின்றும் விடுபட்டு உயர்ந்த இலக்குகளைப் பற்றும் அருநிலை; இறை வழி படுநிலை.

நன்மனத்தை மெய்நதியால் ஆழ உழுது அதில் சிவப்பைங்கூழ் செய்த்து வக்கும் நாள் தொட்டு அப்பயிர் நன்கு வேரோடி, வானளாவி வளர்ந்து, மனதில் வேறு புன் செடிகட்குச் சிறிதும் இடந்தராது பெருகும் காலமட்டும் - ''நெஞ்சம் உமக்கே'' என நாம் தேற்றம் அடையும் போது வரை - அப்பயிருக்குத் ''தகவு'' எனும் காப்புக் கோலி நாமும் ''செம்மையுள்'' நிற்றல் வேண்டும். இவ்விடைக் காலத்தில் நமது மனம், உலக வாசனை முற்றும் அழியப் பெறாததால், மேனுங் கீழும் ஊசலாடித் தத்தளிக்கலாம். இராம இராவணப் போராட்டமும், பாரத வெஞ்சமரமும் மனத்திடை நடைபெறலாம். இப்போர்களில் வென்று சிறத்தற்கு இறையருள் துணை நிற்கும். இவ்வருள் உதய மாதற்கு நாம் சீரிய குணங்களையும் தெய்வ இயல்பின் வழாது ஆற்றும் கருமங்களையும் கடைப் பிடித்து வாழ்வு நடத்தல் வேண்டும். இவ்வுலகத்திலும் நாம் ஒருவனது தயவை எதிர்பார்க்கும் போது, அவன் மனப்படி அவனது போக்கின் படி நாமும் நடந்து அவனைச் சந்தோஷப் படுத்துகிறோம் அல்லவா?

நற்குண நற்செய்கைகளே நம்மைக் காக்கும் அரண்கள். தீக்குணம் புன்செய்கை இவற்றை அறவே நீக்கல் வேண்டும். இவற்றினது நாசமும் தியானத்தின் வழிபெறப்படும். ஒருவனிடம் இகல் உண்டாகின்றது என்று கூறுவோம். இது தீது. அதற்கு எதிரிடையான தெய்வ இயல்பு அன்பு. இத்தன்மையை அகத்திருத்தித் தியானம்புரிவதால் இவ்வெரி எண்ணம் இரிந்து, நமக்கு இன்னாசெய்த அன்னவன் மனமிளகித் தலைதாழ்த்துமாறு பெரிய நன்மை செய்து விடுவதும் சாத்தியமாகலாம். அன்பு எனும் அமிழ்தம் சாலக் கொடிய பகைமையையும் வீழ்த்தும் தெய்விக சக்தி. நமக்குத் தீங்கிழைத்த ஒருவனுக்கு மன்னிப்பளித்து, நன்மை செய்து விடுவது ஒரு சோதனையாகும். அவ்விதம் செய்வது நமக்கு இன்பமளிப்பின் நம்மிடம் பகைமையே இல்லை என்றும், நாம் அன்புருவமாக இருக்கிறோம் என்றும் அறிந்து கொள்ளலாம்.

இப்படித் தீக்குணங்கட்கு மாறான நல்லியல்புகளிற் படிந்து படிந்து அவ்வக் குணங்களைப் போக்க வேண்டும். ஆண்டவன் இயல வழி நமது ஒழுக்கம் அமைதல் வேண்டும். நமது நினைவும் செயலும் இயற்கையொடு இயைந்திருத்தல் வேண்டும். அப்போது தான் தெய்வ இயல்புகள் நம்மிடம் தோற்ற வழி உண்டாகும்.

சீரிய குணங்களும் செயல்களுமே நற்சிவப்பயிரைச்சிதையாது அளிக்கும் அரண்கள். இறைவன் தாட்பாற்சென்னி பொருத்துவான் இத்தனிக்குறிப்பிகிய கெடு நெறி மேற்செலும் உயிர்கட்கு ஊக்கமளித்துக் காப்பது நற்சீலம் எனும் அரிய தோட்கோப்பே யாதல் பற்றி, ''ஒழுக்கமே விழுப்பந்தரும்'' என்று ஆன்றோர் சுருக்கமாக மொழிப. ''தகவு எனும் வேலியிட்டுச் செம்மையுள் நிற்பாராகில்'' என அடிகளும் உணர்த்தினர்.

இக்குறுகிய வாணளில், அந்தகன் அருகில் வந்தான் எனமதித்து, இம்மையில் நன்மை நல்கி அம்மைக்கணும் பின்றொடரும் ஒழுக்கத்தை நேர்மையாக்க - அகப்புறத் தூய்மையை வளர்க்க - இன்றே முயலுதல் செய் காரியம். இந்நற் காரியத்திற்கு மிக ஆக்கமளித்தூக்குவது சிந்தனை - தியானம்.

திருக்கோயில் வழிபாடும் சீர்திருத்தமும்

[பொன்னம்மாள், பி. ஏ., எல். டி.]

V

ஏழாவதாக, ஒவ்வோர் உண்மையை விளக்க முன்னோரால் புனைந்துரைக்கப்பட்ட கட்டுக் கதைகளை ஒவ்வோர் ஊரிலுள்ள கோவிலோடும் சம்பந்தப்படுத்தாமல் 'கோயில்' என்ற மாத்திரத்தானே எவ்விடத் திருப்போருக்கும், எந்நிலையில் வதிவோருக்கும், எத்தகைய அறிவுடையோருக்கும் ஏக நோக்கமும், ஏக சிந்தனையும், ஆனந்தமும், ஆறுதலும் உண்டாமாறு செய்தலும் அத்தியாவசியமே. உதாரணமாக,

திருக்கச்சி - விநாயகர் பூசித்தவிடம் என்றும்		
திருநாகேஸ்வரம்-ஆதிசேஷன்	,,	,,
திருமறைக்காடு - வேதங்கள்	,,	,,
திருநாரையூர் - நாரை	,,	,,
திருஈங்கோய்மலை - ஈ	,,	,,
திருஎறும்பியூர் - எறும்பு	,,	,,
திருக்கழுக்குன்றம் - கழுகு	,,	,,
திருவானைக்கா - யானை	,,	,,

இவ்வாறு மக்கள், தேவர், நரகர் என்ற உயர்திணையின்பாற் பட்டோரேயன்றி அஃறிணைப் பகுதியின்பாற் பட்ட அறிவிலாப் பறவை, விலங்காதியனவும் பூசித்துப் பேறுபெற்றதாகக் கூறும் தனித்தனி இடங்களும், கோயில்களும் மானிடர் உள்ளத்தில் ஆன்மா, கடவுள், இம்மை, மறுமை, மோட்சம் என்பவற்றைப் பற்றிய பல ஐயத்தினை யெழுப்பி, அலைக்கழிப்பை யுண்டாக்குமே தவிர எத்தகைய முத்தி வழிக்கும், அறிவுக்கும் மானிடரை நடத்துமோ என்பதனை வாசிப்போர் சிந்திப்பாராக.

என்னை? எப்பிறவியினும் அரியதெனக் கொள்ளப்பட்ட மானிட ஜென்மம் எடுத்தோன் ஒருவனை 'நீ மரணத்துக்குப் பின் எங்கே போகிறாய்? என வினவிய காலத்தில் அவன் தன் இரு கரங்களையும் விரித்துக்கொண்டு என்னுயிரும் பிறவிகளில் எத்தகைய பிறவியடைவேனோ விண்ணுக் கேறுவேனோ அன்றி மீண்டும் மண்ணுக்கே வருவேனோ தெரியாதென்கிறான். என்ன பரிதாபம்! என்ன அறிவீனம்! கடவுள் சாயலாகச் சிருட்டிக்கப்பெற்றுப் பகுத்தறிவுள்ள மனிதன் தான் போகுமிடத்தையும் தனக்கமையும்நிலையையும் ஓர்ந்தறியும் ஆற்றலும், அறிவுமில்லாதவனும்! ஆனால் கேவலம் பகுத்தறிவும், பக்தியின் குணமும் இல்லாதனவும் ஊரும் பிராணிகள், உயரப் பறக்கும் பட்சிகள் முதலியவற்றின் முடிவை யுணர்ந்து கூறுவனும்! இத்தகைய கட்டுக்கதைகள் சாஸ்திர ஆராய்ச்சிக்கோ இயற்கைப் பிரமாணத்திற்கோ, அன்றி அநுபவக் காட்சிக்கோ எவ்வளவேனும் ஒவ்வாதென்க. மனிதன் கீழ்த்தரப் படியில் தோன்றிப் படிப்படியாய் மண்ணாகி, மரமாகி, நீர் வாழ்வன, ஊர்வன, பறப்பனவாகி, மனுவாகித் தேவனாகிறான் என்ற புராதன சாஸ்திரக்காரரின் கூற்று எத்தனையாய் இப்போது மாறுபட்டு, மிகக் கீழ்த்தரமான மானிடப் பிறவிக்கும் மிக உயர்ந்த மிருகப் பிறவிக்கும் இடையில் ஒருவராலும் கண்டுணரப்படாத ஒரு பெரும் பிளப்புள்ளதெனச் சாஸ்திர நிபுணர் பலர் கூறுதல் இக்காலத்தில் எங்கணும் நம் செவியில் தொனிக்கின்றதன்றோ! இவ்வுண்மைகளெல்லாம்,

"அரிதரிது மானிடராதலரிது"

எனக் கூறி வியந்த நம் மூதாதைகளின் சிறப்பினைக் காட்டா நிற்கின்றன; அன்றியும் "தேவன்: நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; "அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும் பூமியனைத்தையும் பூமியின்

மேல் ஊரும்சகலபிராணிகளையும் ஆளக் கடவர்கள் என்றார்.......அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்'' -- ஆதியாகமம் 1: 26,27. என்று கிறிஸ்தவ சத்திய வேதத்தில் காணப்படும் தேவவசனத்தின் மறுக்கப்படாத உண்மைகளையுமே தெளிவுற வற்புறுத்தி வருகின்றனவென்பதில் ஐயமுளதோ?

அப்படியிருக்க, மகா அரிதான மனிதப் பிறவியின் தோற்றம், வளர்ச்சி, முடிவு முதலியவற்றைப்பற்றித் தெளிவாக அறிவுறுத்தும் அரிய நூல்கள் பலவிருக்கவும், அவற்றை யோராது, மனிதன் தான் செல்லும் வழியையும் இடத்தையும் அறியாதவாறு அஞ்ஞானத்தால் அதை மறைத்து, ஐயம், பயம், அவநம்பிக்கை, தளர்ச்சி, நிர்விசாரம் முதலியவற்றைப் பிறப்பிக்கத்தக்க கட்டுக்கதைகளைப் புனைந்து அறிவுள்ள சிறியோரை அலமரச் செய்யும் அறிவிலாப் பெரியோரை யென் செய்வது! நம் கோயில்களில் பலவற்றைப் பற்றிய கதைகளெல்லாம் ஈசனின் அன்பையும், அவரையடைந்து முத்தி யின்பத்தினை நுகரும் முறைகளையும், ஏதுக்களையும் மிகக் கீழாகத் தாழ்த்தி, உயரிய அறிவினையும், உண்மை வழியினையும் கெடும்படி மறைத்தற்கே ஏதுவாகின்றன. இயற்கை பலவும் கடவுளின் கரத்தின் கிரியையே எனினும் இயற்கைப் பொருட்கள் கடவுளாகாவென்றும், இயற்கைப் பொருள் யாவற்றினும் மானிடன் இறைவனின் திருச்சாயலை அருமையாய்ப் பிரதிபிம்பிக்கிறானென்றும், இவ்வரிய மானிடனைக் கெட்டழியாதவாறு அவனைத் தம்மிடம் சேர்த்து ஒப்புரவாக்கி, முடிவிலா முத்தியின்பத்தை யளிக்கும் மார்க்கத்தை அவ்விறைவன் மனிதனுக் கறிவுறுத்தியிருக்கிறார் என்றும், இத்தகைய அரிய காரியத்தில் சிறியோரும் பெரியோரும் ஆடவரும் பெண்டிரும், அறிவுள்ளோரும் அறிவில்லாரும் உணர்ந்து கொள்ளுமாறு அறிவு கொளுத்தும் வழிவகைகளைப் பெரியோரும், குருக்களும், கோயிற்றலைவரும் தேடிக் கையாள வேண்டும். அப்போது கோயில் சிறப்புற்றோங்கும். அப்படிச் செய்யத் தவறித் தம்மூடக்கொள்கைகளையும் உண்மையற்றதும், உலகில் எங்கனும் எக்காலமும் நிகழாததுமான புனையுரையால் மானிடரை அறிவு பிறழச் செய்வதிலேயே கருத்தாயிருப்பாராயின் அத்தகையோரைப்பார்த்தே கிறிஸ்து ''மாயக்காரர், பரிசேயர், வேதபாரகர்''—மத்தேயு 23 : 23. என்றும் ''ஆட்டுத்தோலைப் போர்த்துத் திரியும் ஓநாய்களென்றும்—மத்தேயு 7 : 15 —''கொசுகை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்கும்'' மத்தேயு 23: 24 அசத்தியர் என்றும் கூறுகின்றார் என்றறிக. பகுத்தறிவில்லாதார் பின் பரமனின் உண்மைகளைப் பிறர்க் குணர்த்துமாறு என்ன? அது ''குருடனுக்குக் குருடன் வழிகாட்டினது போலிருக்கும். அப்படியானால் இருவரும் படுகுழியில் விழுவர்'' மத்தேயு 15 : 14. என்று கிறிஸ்திறைவன் கூறியதை விளக்குமே.

எட்டாவதாக:—'எம் கனவில் இன்னின்ன கடவுள் தோன்றி, இன்னின்ன விடத்தில கோயில் நிறுவும்படி கூறினார்' என்றும் பிறவுமான மெய்யில் உரைகளைக் கூறிக்கொண்டு கண்டா கண்ட விடங்களிலெல்லாம் பல கட்டைகளையும், கற்களையும் தேவென நிறுத்தி, முதலில் அதற்கொரு குடிலினைக் கட்டிக் குங்குமம் மஞ்சள் முதலிய குறிகளிட்டு மலர் சாத்தி, மாலை புனைந்து, பின் சிறிது சிறிதாய் இடத்தைப் பெருக்கி, உள்ளுறையும் சடத்தைப் பெருக்கி, அதன் மூலமாய்த் தம் வயிற்றையும் பெருக்கும் தீவினையாளர் நம் தேசத்தில் பெருகாதிருக்கப் பார்த்துக் கொள்ளல்வேண்டும். இத்தகைய பகுத்தறிவும், சீரிய நோக்கமும் மிகக் குறைந்து விளங்குவதினாலேயே தற்கால இளைஞருக்கும், பகுத்தறிவுடைய மக்களுக்கும் கோயிலைப் பற்றியும், கோயில் வழிபாடுகளைப் பற்றியும் எண்ணமற்றுப் போகிறது. கோயிற்றலைவர், பெரியோர் இவரின் அநுமதியின்றி எக்காரணம்பற்றியும் எவ்வாறாயினும் தத்தம்

மனப்போக்கின்படி கோயில் நிறுவவாவது, குறிகளும்பாவைகளும் சமைக்கவாவது இடமும் உரிமையும் அடையாவண்ணம் கண்டிப்பாய்ப் பார்த்துக் கொள்ளல் வேண்டும். அப்போது மூலைகளிலும், முடுக்குகளிலும், சந்துகளிலும், மரப்பொந்துகளிலும் காரணமின்றி மல்கிக் கிடக்கும் அறிவும், ஆற்றலும் ஆருயிர் ஓம்பும் திறனுமற்ற எண்ணிறந்த தெய்வங்களின் தொகை சுருங்கும். அப்போது விண்மண்யாவற்றிற்கும் தலைவனை அறுதி முதற் கடவுளை யறிய நம்மக்கள் ஏவப்படுவர்; அறிவும் பெருகும்; அந்தகாரம் இரிந்தொழியும். ஆன்மாக்கள் சித்திபெற ஏதுவுண்டாகும்.

அவ்வாறே சரஸ்வதி பூசை ஆயுத பூசை முதலிய பலதிறப்பட்ட தேவதைகளின் பூசைகளையும் தத்தம் இல்லங்களில் அவரவர் மனம்போனவாறு, மரத்தாலும், இரும்பாலும், லோகங்களாலுமான பற்பல துணைக்கருவிகளுக்கும், ஆயுதங்களுக்கும், வண்டிக்கும், மாட்டுக்கும், வீட்டுக்கும் மலர் சாத்தி, சந்தனம் தெளித்து, குங்குமம் இட்டு, குறிகளும் அடையாளங்களும் போட்டுத் தெய்வமெனக் கும்பிட்டு விழாது, விசேஷ தினங்களில் பொதுமன்றத்தில் ஏகோபித்துக் கூட்டி எல்லா நல்லறிவுக்கும், பூரண நல்வரத்திற்கும் காரணமும் இருப்பிடமுமான ஜோதிகளின் பிதாவைத் தோத்தரித்துப் பல வரங்களையும், பலத்தினையும், பேறினையும், ஆசீர்வாதத்தைதயும் பெற எத்தனிப்பது மானிடத் தன்மையாகும்.

ஒன்பதாவதாக:-இல்லின்கண் இருப்போருக்குப் பிணி, நல்குரவு, மூப்பு, சாக்காடு, சத்துரு மோசம் ஏற்படுங்கால் அறியாமாக்கள் பலதிறப்பட்ட பூசாரிகளின் பொய்க்கூற்றுக்களை நம்பி ஐயனார், வீரபத்திரன், பொருதடிமாடன், கருப்பன், இடும்பன், காத்தவராயன், காளி, கங்காளி, மாகாளி, பத்திரகாளி, பிடாரி, காட்டேரி, தூர்த்தேரி, மாரி, இன்னும் பிறவுமான அனந்தமானபேய் பசாசங்களுக்குக் கள்ளுடன் சாராயங்களைப்படைத்து, கடாசேவல்களை இரணபலிகொடுத்து, தோசைகள், வடைகள், பிட்டு, அதிரசங்கள், எள்ளுடன் பயறு, பழங்கள், பச்சரிசி, தேங்காய்களும், எண்ணெயோ, நெய்யோ, பால்களோ, தயிரோ, இன்னும் எத்தனையோ, விதங்கள் செய்தும், 'இன்னும் குறைகளுண்டு எட்டிப் போடா' எனத் தள்ளிச் சத்தமிட்டலறும் சத்துருப் பேய்களைக் கும்பிட்டுக், குறையிரந்து விண்ணப்பிக்கின்றனர். அந்தோ! வீணிலே பொருளெல்லாம் இழந்தும் பாடு நீங்காது பலவாக நின்று தவிக்கும் நம்பாரத மாதா மிகப் பரிவுடன் ஈன்ற பசித்த மக்களா! நும்பசிப்பிணி தீர வழிகாட்டி புண்மிக்கும் புரமகுணத்தோர் உங்களில் இல்லையோ! பாழிலே பொருளெலாம் தோற்று ஏழையாயினீரே! என் செய்வீர்!

"தாகமுள்ளவர்களே! நீங்கள் எல்லாரும் தண்ணீரண்டைக்கு வாருங்கள். பணமில்லாதவர்களே! நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள். நீங்கள் வந்து பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்"—ஏசாயா 55 : 1-2. "உசிதமான கோதுமையினால் உன்னைப் போஷித்துக் கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்"—சங்கீதம் 81 : 16. "சத்துரு உன்னை நெருக்குவதில்லை; நியாயக்கேட்டின் மகன் உன்னை ஒடுக்குவதில்லை" சங்கீதம் 89 : 22; "அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும் பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார்; இரவில் உண்டாகும் பயங்கரத்திற்கும் பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்திற்கும் பயப்படா திருப்பாய்... பொல்லாப்பு உனக்கு நேரிடாது; வாதை உன் கூடாரத்தை அணுகாது; உன் வழிகளில் எல்லாம் உன்னைக் காக்கும்படி தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்."—சங்கீதம் 91! "நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய்; கொடுமைக்குத் தூரமாவாய்; பயமில்லாதிருப்பாய்

திகிலுக்குத் தூரமாவாய்.......உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்" ஏசாயா 54 : 14-17. என்றத் துணையாய்க் கூவியழைத்துக் கனிந்த அன்புடனும், கணக்கற்ற ஆசீர்வாதங்களுடனும் உன்னைத் தாங்கி ஆதரிக்கக் காத்துக்கொண்டிருக்கும் கர்த்தராகிய தேவனிடத்திற்கு நீ திரும்பினால் நலமல்லவோ! உன்னதமானவரின் மறைவில் வந்தடையாமலும், சர்வ வல்லவரின் நிழலில் வந்து ஒதுங்காமலும் அப்பமில்லாததற்காக உங்கள் பொருளையும், திருப்திசெய்யாததற்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்?

பத்தாவதாக:--புரோகிதன், தொட்டியன், ஆண்டி, வள்ளுவன், இன்னும் அழுக்குப் படிந்த ஆடையினையும், அருவருக்கத்தக்க துர்நாற்றமுடைய சடத்தினையுமுடையராய், வயிற்றுத்தேவன் பொருட்டு வழிகள்தோறுமிருந்து சாங்கிவிழும் வேடதாரித் தம்பிரான்களுமான கணக்கற்ற பேயர்களை வழுத்தி, குறி கோடங்கிகள் கேட்டு, வாரம் யோகம் முதலியவை தெரிந்து, சாதகம் எழுதி, நாட்கணித்து, தக்க ராசிப்பலன்களும் பிரித்து, சடங்குகள் விதவிதமாய்ச் செய்து, பல்லி கத்தினும் நெஞ்சிலே அஞ்சி, நிமித்தமும் பொருத்தமுங் கண்டு, இவ்வாறு கெடுகினும் விண் சாத்திரங்களைப் பார்த்து, நிலையற்ற வீண் பொய்களை நம்பிப் பாழிலே தம் பொருளெலாம் தோற்று ஏழையாகா வண்ணம் நம் பாரத மக்களைப் பாதுகாத்தல் கடன் என்பதைப் பெரியோர் கருத்தில்வைத்தல் கடன். இவ்வாறு செய்கின்ற காலையிற்றானே சத்தியவந்தனும், சகல கலாவல்லனும், தாசர் நிலையறிந்து தாயகமே புரக்கத் தன்னைத் தாழ்த்தி, அன்பரின் பல இன்னல்களையும் அறவே நீக்கி இன்பம் அளிக்கச் சித்தங்கொண்டு காத்து நிற்கும் ஈறில்லா நாதனைச் சரணடைந்து அவரது அன்பைச் சோதித்து ருசிக்க அறியாதவர்களையும் தூண்டல் இயலும்.

பதினொன்றாவதாக:— பலவிதமாய் நேர்ந்து பிரார்த்தனை செய்து கொண்டு அதன் காரணமாக தோளெல்லாம் தடிக்கக் காவடிகள் சுமந்தும், கடும்பயணங்களை நடந்தும், கயிறுகள் செடில் குத்தியாடிக் கூவிக் கொக்கரித்துத் தீயினாற் குதித்தும், கொடிய பந்தங்களால் சுட்டுக்கொண்டு கூத்தாடி, உடலெங்கணுங் கீறிக்கொண்டும், மாரடித்துக் கொண்டும், நடைவிளக் கேற்றிக் கொண்டும், தோளின் நடுவினிற் சுட்டு செருப்பினால் அடிக்க இராமா இராமா வெனக் கத்தி யலறிக்கொண்டும், அங்கப் பிரதட்சணம் உருண்டும், கோடிக் கணக்கான் விரதங்கள் நோன்புகள் பிடித்தும் மெய்ப்பலன் காணாத கோடானுகோடி அறிவிலிகள் அஞ்ஞானம் என்னும் சாகரத்தில் அழுந்தி, ஆன்ம மரணமடைந்து மாண்டுபோகிறதை நாம் எங்கணும் காண்கிறோமே. அன்னோரைத் திருத்தி, அறிவைப் பெருக்கி, எவ்வினையையும் இருங் கருணையாலே தவிர்க்கும் இறைவனையடைந்து வாழ்ந்து சுகிக்கும் சீரிய மக்களாக்க வேண்டுமென யாரேனும் கருதியதுண்டோ?

அந்தோ! இவ்விகோரக் காட்சிகளைக் காணுங்காறும் அன்புமயமான அனாதி சிவத்தின் உண்மையை யார் கேட்பார்? யார் நம்புவர்? யார் ருசிக்க முன் வருவர்? "அன்பே சிவமயம்" என்றும், சைவ சமயமே சீவகாருண்யத்தைக் கொண்டாடுகிறதென்றும், கொலை தவிர்தலைத் தலைக்கொண்டதென்றும் வீணே கழறிக்கொண்டும், பல நூல்களை வரைந்துகொண்டும், மேடைகளில் நின்று உபந்நியாசங்களைச் செய்துகொண்டும், மன்னுயிரை மீட்கத் தன்னுயிரை யீந்த மட்டில்லா அன்பின் வல்லபத்தினிடம் மானிடரைத் திருப்பி உண்பித்து, உய்விக்கச் செய்யுமாறு பலவாறான பாடுகட் குட்படும் பக்தரான பல்லோரை 'அவர் இழிகின்றனர்; ஈனரிடமே அவர் செயல் வாய்க்கும், அவர் பயன் நோக்கிப் பணிசெய்பவர்; என்றிவ்வா றெல்லாம் இழித்

துத் தூற்றிக்கொண்டும், தங்களை மதாபிமானிகளாகக் காட்டிக் கொண்டு திரியும் கணக்கற்ற போலிகளையும், அவரது கூற்றினையும் நம்புவது எக்காரணம் பற்றி? இக்கொடிய காட்சிகளைக் காண்பவரும் கேட்பவரும் அம்மையப்பரின் அன்பினை விளக்கும் கட்டுக் கதைகளையும், வரலாறுகளையும் கேட்க நேருங்கால் இது முயற் கொம்பும் குதிரை முட்டையுமாக முடிவுறும் எட்டிச் சுரக்காய்களே என்றிகழ்ந்து நகையாடி நிர்விசாரிகளாகத் திருப்பரோ? இரக்கம், கருணை, ஜீவவதையின்மையின் மேன்மை, இறைவன் அன்பு இவற்றினை அநுபவார்த்தமாகக்காணாமல் அதற்கு, மாறானகோரக் காட்சியினையும், கொடூரத்தோற்றத்தினையுமே காணும் நம் தற்கால இளைஞர் கோயிற் பணியை எள்ளி நகையாடுகிறாரே என வருந்துவதில் யாதுபயன்?

அந்தோ! கருணைப் பெருக்கமாகிய கடவுளான தந்தையின் அன்பை இம்மாக்கள்பொருட்படுத்தியவாறென்னே! இப்பூவுலகில் எங்கேனும் தந்தையின் தயையைப் பெற மைந்தர் தலைகீழே நிற்பதும் தடிகளால் தம்மை யடித்துக் கொள்வது முண்டோ? தந்தையன்றோ தம் மைந்தருக்கான யாவற்றையும் சேர்த்து வைப்பதோடு, அவரைத் தன்னிரு கரங்களால் தழுவி முத்தமிட்டு மடிமேல் வைத்துக் கொஞ்சி உச்சிமோந்து உடலாவி பொருளெலாம் அவரின் நலங்கருதித் தியாகஞ் செய்து, அம்மைந்தரின் பொருட்டு இராப்பகல் ஓய்வின்றி யுழைத்து நெற்றியின் வேர்வை நிலத்தில் விழப்பாடுபட்டு ஆருயிரையும் அளிக்கிறான். இதையன்றோ உலகக் காட்சியில் காண்கிறோம். இது இவ்வுலகத் தந்தையின் அன்பானால், நம் பரம தந்தையின் அன்பு இதனிலும் தாழ்ந்ததோ? "உன் தகப்பனும் தாயும் உன்னைக் கைவிட்டாலும் நான் உன்னைக் கைவிடேன்" என்று தமது சத்தியத்தின் பேரிலும் பரிசுத்தத்தின் பேரிலும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கும் அருள் நாதனின் அன்பு அனுபவிக்கக் கிட்டாததோ?

அடக்கவிலைப் பதிப்பு நூல்கள்

சம்பந்தர் தேவாரம் ரூபா 1. அப்பர் தேவாரம் ...	0	12
சுந்தரர் தேவாரம்	0	4
திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு	0	10
திருவாசகம்	0	2½
பதினொராந்திருமுறை	0	11
தாயுமானவர் பாடல்	0	6
திரு அருட்பா—(பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு		
5-வது திருமுகப் பகுதி	0	6
6-வது தனிப்பாசுரப் பகுதி	0	5

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

இடியேறு

வித்தல்பாய பட்டேல்

தேசபக்தர் வித்தல்பாய் பட்டேல் ஜினிவாவில் உயிர் துறந்தார் என்று கேள்வியுற்று வருந்துகிறோம். வித்தல்பாய் இந்திய சட்டசபையில் பன்னெடுநாள் அங்கம் பெற்றிருந்தவர். மாண்டேகு - செம்ஸ்பர்ட் திட்டப்படி அமைந்த அச்சட்டசபையில் முதல் முதல் அமர்ந்த இந்தியத் தலைவர் தேசபக்தர் பட்டேல் ஆவர். அவர் தலைவராக அமர்ந்து புரிந்த வீரச்செயல்கள் இந்தியருள்ளத்தில் புத்தம் புதிதாகப் படிந்து கிடக்கின்றன. தேசம் தற்போது உற்றுள்ள நிலையை அறிவால் ஒழுங்கு செய்யவல்ல ஆற்றல் வாய்ந்தவர் அன்பர் வித்தல்பாய் பட்டேல். அத்தகை அறிவு வாய்ந்த பெரியார் இப்பொழுது உயிர் துறக்க நேர்ந்தது தேசத்தின் துரதிர்ஷ்டமே யாகும். எல்லாம் ஆண்டவன் செயல். வித்தல்பாய் பட்டேலின் உயிர் அமைதி பெறுவதாக. சாந்தி! சாந்தி! சாந்தி!

திருக்குறள்

தண்டபாணி விருத்தியுரை

திருக்குறள் அறத்துப்பால் மூலமும் அதற்குத் தண்டபாணி வரைந்த விருத்தியுரையும் அடங்கிய ஒரு நூல் வரப் பெற்றோம். திருக்குறளுக்குப் பண்டைநாளில் பதின்மர் உரை வரைந்தனர். பின்னே வேறு சிலரும் அப்பெருநூலுக்கு உரைகண்டனர். இன்னும் பல உரைகள் வெளிவரின் திருவள்ளுவர் இன்புறுவர். திருவாளர் நாகை - சொ. தண்டபாணிப் பிள்ளை அவர்கள் அறத்துப்பாலுக்கு எழுதிய விருத்தியுரை பல வழியிலும் போற்றற்குரியது. மற்றிருபாலுக்கும் அவர் உரை காண முயன்ற வேளையில், அவர் விண்ணுல கெய்த நேர்ந்தமை தமிழ் நாட்டின் தவக்குறைவேயாகும். பழைய உரையாசிரியர் சிலர், தங்காலத்துக்கேற்ப வெளியிட்ட கருத்துக்களைத் தண்டபாணி இக்காலத்துக்கேற்ற முறையில் மாற்றஞ் செய்து திருவள்ளுவருக்குச் செவ்விய தமிழ்ப் போர்வை புனைந்திருத்தல் மகிழ்ச்சி யூட்டுகிறது. தண்டபாணியின் பதவுரையும், அகல உரையும் தமிழ் நடைக்கு ஆக்கந் தேடுவன என்பதில் சிறிதும் ஐயமில்லை. பொருந்திய முறையில் இலக்கணக் குறிப்புகள் ஆங்காங்கே பொறிக்கப்பட்டிருக்கின்றன. பதிப்பும் கட்டடமும் நன் முறையில் அமைந்திருக்கின்றன. செவ்விய முறையில் இந்நூலை வெளியிட்ட சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கு நமது நன்றி உரியதாக. விலை: ரூபா 1-12-0; விலாசம்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 6, பவளக்காரத் தெரு, சென்னை.

திருப்புகழ்த் திருமுறைத் திரட்டு

அருணகிரிநாதர் அருளிச்செய்த திருமுறைத் திரட்டு என்னும் ஒரு நூல் நமது பார்வைக்கு வந்தது. அருணகிரிப் பெருமான் அருளிச் செய்த திருப்புகழ்களுள் இத் திரட்டுக்கண் நானூறு அடங்கி யிருக்கின்றன; திருவகுப்புகள் பதினெட்டும், கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி ஆகிய மூன்றும் முற்றும் அடங்கி யிருக்கின்றன. குறிப்புரை ஆங்காங்கே சுருங்கிய முறையில் வரையப் பட்டிருக்கிறது. செய்யுள் முதற் குறிப்பும் அமைந்திருக்கிறது. திரு. க. கயிலாய முதலியார் வரைந்த முன்னுரை இந்நூலை அணிசெய்கிறது. பதிப்பு நன்முறையில் செப்பஞ் செய்யப் பட்டிருத்தல் கண்டு மகிழ்வெய்துகிறோம். அருணகிரிநாதர் திருவுருவப் படம் உள்ளத்தைக் கவர்கிறது. இத் திரட்டைப் பலர்க்கும் பயன்பட வெளியிட்ட காஞ்சி நாகலிங்க முனிவர்க்குத் தமிழுலகம் கடமைப் படுவதாக. விலை ரூபா 2.

கிடைக்குமிடம்: "காமாட்சி விலாசம்", கீழ்ப்பாக்கம், சென்னை.

சாமி கம்பெனியின் மருந்துகள்

வேலூர் சாமி கம்பெனியார் நமக்கு அனுப்பிய அரைக்கீரைத் தைலம், சந்தனாதித் தைலம், பன்னீர், சாரதாஞ்சனம் ஆகிய நான்கையும் நமது நிலையத்துள்ளார் சிலரிடம் ஈந்து பயன் படுத்திப் பார்க்குமாறு சொன்னோம். பன்னீரின் மணமும், தைலங்களின் குணமும் அவர்களை மகிழ்வித்தன. சாரதாஞ்சனம் கணங்களைப் போக்குவதாகும். இவைகளில் தீமையில்லை என்று சுருங்கச் சொல்லலாம். விலாசம்: எம். பி. சுவாமி அண் கோ, பஸ்ஸ்டாண்டு, வேலூர், வடார்க்காடு ஜில்லா.

"நவசக்தி"யின் நிலை

இன்று "நவசக்தி"யின் பதின்மூன்றாம் ஆண்டு முற்றுப் பெறுகிறது. பதின்மூன்றாண்டுகளாக "நவசக்தி" நடைபெற்று வந்த முறைமையை நேயர்களுக்கு விரித்துக் கூறவேண்டுவதில்லை. "நவசக்தி" பத்து வயதுவரை பிறை என வளர்ந்து வந்தாள். "நவசக்தி"யின் பதினொராம் ஆண்டிலும், பன்னிரண்டாம் ஆண்டிலும் குழப்பம் ஏற்பட்டது. அக்குழப்பம் இன்னும் நீங்கவில்லை என்றே கூறலாம்.

உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது "நவசக்தி"க்கு ஈடுகாணம் கேட்கப்பட்டதும், அது காரணமாக "நவசக்தி" ஆறு திங்கள் நிறுத்தப்பட்டதும், அதனால் நேர்ந்த கஷ்ட நஷ்டங்களை முன்னிட்டுப் பின்னே மூன்று திங்கள் நிறுத்தப்பட்டதும், பின்னர்த் திங்கள் வெளியீடாக மாற்றப்பட்டதும் அன்பர்கட்குத் தெரியும். இப்பொழுது பழையபடி "நவசக்தி"யை வாரப்பதிப்பாக்குமாறு நண்பர் சிலர் முடங்கல் தீட்டியுள்ளார்.

"நவசக்தி"யின் நலன் கருதி உழைத்து வந்த தேசபக்தர் பலர் சிறை புக நேர்ந்த காரணத்தால் அவரவர் தத்தம் கடமைகளை நேரிய முறையில் ஆற்ற இயலாமை குறித்து வருந்திக்கொண்டிருக்கிறார். அவர்களில் சிலர் ஏஜண்டாக இருந்தவர். அவரவரிடம் நிக்குண்டு தேங்கிக்கிடக்கும் தொகையில் ஒரு பகுதிவரினும் "நவசக்தி"யைப் பழையபடி வாரப்பதிப்பாக நடத்தல்கூடும். "நவசக்தி"யின் நலன் கருதி மனமார உழைத்துவந்த அவ்வன்பர்கள் நிலை செம்மையுறும் வரை அவர்களை நெருக்கி வலியுறுத்த மனம் எழவில்லை. அவர்கள் அனைவரும் சிறந்த தேசபக்தர் என்பதை யான் அறிவேன்.

"நவசக்தி" நின்றிருந்த காலத்தில், பொழுது போக்கின் பொருட்டுப் பெரிய புராணத்துக்கு அரும்பத விசேடக் குறிப்புரை வரையும் முயற்சியில் தலைப்படலானேன். அவ்வுரையோடு கூடிய பெரிய புராணம் மாதச்சஞ்சிகையாக வெளிவந்துகொண்டிருக்கிறது. பெரிய புராண வேலை இன்னும் இரண்டொரு திங்களில் முற்றுப் பெறும். இவ்வேலை முற்றுப்பெற்றதும் "நவசக்தி"யைப் பழயபடி நடாத்த முயலுதற்கு வாய்ப்பு ஏற்படலாமென்று கருதுகிறேன். பிற, அடுத்த "நவசக்தி" பாலில் விளக்கப்படும்.

திரு. வி. க.

—

"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

இயற்றிய நூல்கள்

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,

பெண்ணுரிமை வேண்டுமா,

தீண்டாமை யொழிதல் வேண்டுமா,

சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,

இயற்கை யின்பம் வேண்டுமா,

வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா?

வேண்டுமானல்

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள், அந்நூல்கள் வருமாறு:—

		ரூ.	அ
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை	....	2	0
தமிழ்த் தென்றல்	....	2	0
முருகன் அல்லது அழகு	....	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்	....	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	....	2	8
என் கடன் பணிசெய்து கிடப்பதே	....	0	8
சைவத்தின் சமரசம்	....	0	8
சைவத்திறவு	....	0	8
கடவுள் காட்சியும் தாயுமானரும்	....	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம் ...	...	0	4
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து	....	0	8
நாயன்மார்	....	0	3
சைவ சமய சாரம்	....	0	1
இமயமலை அல்லது தியானம்	....	0	6
தமிழ்நாடும் நம்மாழ்வாரும்	....	0	4
உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்....	....	0	4
முருகன் அருள் வேட்டல்	....	0	4
சமரச சன்மார்க்க போதம்	...	0	8

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி.பி.யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

ஸ்ரீராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

	ரூ.	அ.
ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (விரிவானது) ...	5	0
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்) ...	0	8
ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம் ...	1	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி ...	1	6
குருதேவர் வாக்கியம்	0	5
நமது தாய்நாடு	0	8
பக்தியோகம்	0	10
கர்மயோகம்	0	12
சிகாகோ பிரசங்கம் ...	0	5
விவேகானந்தரின் கடிதங்கள் ...	0	8
எனது போர் முறை	0	2
பவாஹாரி பாபா	0	3
ஜகஜீவபர விளக்க வினாவிடை ...	0	13
பக்தி மார்க்கம்	0	2
முத்திநெறி	0	5
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0	2

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர், சென்னை.

கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணா. 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

கந்தர் அநுபூதி

சென்னை, இராயப்பேட்டை வேத ப்ரவசன மந்திரத்து
சிவத்தியாஞனந்த மஹரிஷி யவர்கள் எழுதிய

கூடார்த்த தீபிகை

என்னும் புத்துரையோடு கூடியது. இதுவரை இவ்வகைத் தெளிவான அநுபூதி உரை வெளிவரவில்லையென்று படித்தோர் பலரும் கொண்டாடிக் கூறியுள்ளார். விலை ரூபா 1.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

வித்வான்
த. சண்முகக் கவிராயரின்

மகாபாரதம் தமிழ் வசனம்

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப் பட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட் டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5. மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

வெள்ளி பஸ்பம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும்புருக்கி, சீரிழிவு, வெஷ சம்பந்தகுன்மம் பெரும்பாடு எல்லாம் தீரும். தளர்ந்த தாது வலுக்கும். மற்ற நோய்களுக்கும் மருந்துண்டு. வியாதியின் விபரம் எழுதினால் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 40 நாள் மருந்தின் விலை ரூபா 2-8-0.

விலாசம் :—

சே விசுவநாத செட்டியார்,
வைத்யம், லாலுகுடி, திருச்சி ஜில்லா.

அமிர்த சாகரம்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய

ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள்

அமிர்த சாகரம் போன்றவை. 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1 க்கு ரூபா 1.

இனம்! இனம்!

இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி

என்னும் ஆரோக்கிய மலரைக் கேட்போருக்கு இனமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கெர்ப்ப எண்ணெய்

பெண்களுக்குண்டான பொறுக்கமுடியாத வயிற்று வலியையும், ருதுக சம்பந்தமான கெடுதல்களையும் நீக்கி சந்தான விருத்தியைக் கொடுக்கும். ஒருமுறை பரிட்சியுங்கள். அநுபவத்தில் கைகண்டது.

புட்டி ஒன்றுக்கு ரூபா 2.

ஏராளமான நற்சாட்சிகள் பெற்றது

C. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை,
பழநி S. I.

ஆனந்தாதி
ஆனந்த அட்சயாந்த

73-வருட பஞ்சாங்கம்

விலை ரூபா 7.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

நவசக்தி

பெரிய புராணம்

மூலமும்

அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகின்றன

ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம் !

சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ் மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராண மெங்கும் பத்திச் சுவை நனி சொட்டிக் கொண் டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக் கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரிய புராணம். கடவுள் அன்பு, ஆன்ம நேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல் நயம், பொருள் நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரிய புராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.

இத்தகைய அரும்பெரு நூலின் மூலமும், ''நவசக்தி'' ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதிய அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும், அன்பர்கள் எளிதில் வாங்கிப் பயன்பெறும் பொருட்டு மாதந்தோறும் சஞ்சிகை உருவில் வெளிப்படுத்தப் படுகின்றன.

ஓலைப் பிரதிகளைக்கொண்டு மூலம் ஒப்பு நோக்கப்படுகிறது. பொருந்திய பாடபேதங்கள் குறிக்கப்படுகின்றன. 25 ஆண்டுகளுக்குமுன் வெளிவந்த பதிப்புக்கும் இப்பதிப்புக்கும் பலதிற வேற்றுமைகளுண்டு. குறிப்புரை, பதவுரை போலத் துணைசெய்யும். இக்காலத்துக்கு இன்றியமையாத ஆராய்ச்சி விசேடங்களும் பொறிக்கப்படுகின்றன.

சுமார் 25 சஞ்சிகையில் புத்தகம் முடிவு பெறலாம். பின் விலை புத்தகம் ஒன்று 7 ரூபாய்க்கு மேலாகும்.

அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.

சந்தா விவரம்

புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை ரூபா 5.

,, ,, ,, வெளியூர்—தபாற் செலவுடன் ,, 6.

மாதச் சஞ்சிகை ஒன்றன் விலை அணா 4—சென்னைக்குமட்டும்.

6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

காரியஸ்தர் :—முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

பாம்பன் :

ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள்

இயற்றிய நூல்கள்

	ரூ.	அ.
சிவஞானதீபம் 2-ஆம் பதிப்பு	0	8
ஸ்ரீ [illegible] வியாசமும் குருதி— [illegible] வியாசமும் 1-ஆம் பதிப்பு	1	0
[illegible] வியாசம்	0	10
[illegible] 2-ஆம் பதிப்பு	0	11
[illegible]	0	7
[illegible] உரையாசிரிய [illegible]	2	8
[illegible] உரையா [illegible]	2	0
[illegible]	0	3
[illegible] உரையாசிரிய [illegible]	10	0
ஸ்ரீமத் குமாரசுவாமியம்	5	0
[illegible]	0	6
[illegible] 6-ஆம் பதிப்பு	0	6
[illegible] 3-ஆம் பதிப்பு	0	2
[illegible]	8	8
[illegible]	0	2
[illegible]	0	4
[illegible]	0	1½
[illegible]	0	2½
பாம்பன் : ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம்	0	8
[illegible]	0	12

ஜோதிட நூல்கள்

	ரூ.	அ.
[illegible]	1	8
[illegible]	1	0
ஜோதிட [illegible]	0	12
[illegible]	0	12
[illegible]	1	0
[illegible]	2	0
ஜோதிடக் [illegible] உரையும்	0	8
ஜோதிட அரிச்சுவடி 1, 2, 3, 4 பாகங்கள் [illegible]	1	0
[illegible]	1	0

வைத்திய நூல்கள்

	ரூ.	அ.
புலஸ்தியர் [illegible] 300	1	0
அகஸ்தியர் பன்னிருகாண்ட வைத்தியம் 200	0	12
அகஸ்தியர் [illegible]	1	4
அகஸ்தியர் வைத்திய [illegible] 360	0	12
இராம தேவர் [illegible]		
,, [illegible] 155	0	12
,, [illegible] 300-க்கு [illegible] 150	0	10
,, [illegible] 300	0	12
,, பஞ்ச [illegible] 300	0	14
,, [illegible] வைத்தியம் 300	0	14
,, [illegible] 400	1	4
,, [illegible] 100	0	12
,, வைத்திய [illegible] 150	0	10
,, வைத்தியம் 300 [illegible]	0	1[illegible]
,, [illegible] 600	1	8
,, [illegible] 700	1	8
,, [illegible]	1	4
,, [illegible] 300	0	14
சித்த வைத்திய [illegible]	2	8
[illegible]	2	0
[illegible] வைத்திய [illegible]	1	8
அகஸ்திய முனிவர் பூரண [illegible]	0	12
இராம தேவர் [illegible]	0	8
அகஸ்திய முனிவர் [illegible] 100-ம் [illegible] 100-ம்	0	12
[illegible] 700	1	0
[illegible]	0	4
அகஸ்தியர் வைத்திய பூரணம் 205	0	1[illegible]
[illegible]	0	12
[illegible] வைத்திய [illegible]	2	8
அகஸ்தியர் [illegible] வைத்தியம் 13[illegible]	0	1[illegible]
அகஸ்தியர் [illegible] 1500 [illegible] 200	1	[illegible]

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை

Registered No. M. 1500. "NAVASAKTI"

ஒரே கடவுள் ஒரே சமயம்

மக்கள் அனைவரும் சகோதரர்

சமரச சன்மார்க்க போதம்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரனார்
இயற்றியது.

உலகம் விரும்பும் சமதருமம், சுதந்திரம், சகோதரத்துவம் என்னும் மூன்றையும் இந்நூல் அறிவுறுத்துகின்றது.

மக்கள் வளர்ச்சிக்குத் தடைகளாயுள்ள மூட வழக்க ஒழுக்கங்களை ஒழிப்பதற்குரிய சீர்திருத்த முறைகளை இந்நூல் நன்கு விளக்கியிருக்கிறது.

ஒரே கடவுள் ஒரே சமயம் என்னும் உண்மையை இந்நூலிற் காணலாம்.

இயற்கை நுட்பங்கள் இந்நூற்கண் இனிது நுதலப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஒவ்வொருவரிடத்திலும் இருத்தல் அவசியம்.

விலை அணா 8.

சாதன சதுட்டயம்

முத்திமார்க்கத்திற்குரிய அருமையான போதனைகள்

ஞானமார்க்கத்தில் கடந்திருக்கும் பிரம்மஞானிகளுடைய பெரிய தலைவர் தேவாபி என்னும் ரிஷி முத்தர், இப்போது இமயமலையில் [illegible] என்ற பெயருடன் வீற்றிருக்கின்றார். இவ்வாசிரியர் ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குச் சிறு வயதில் [illegible] பிரம்மஞான [illegible] ஸ்ரீமான் லெட்பீட்டர் அவர்களும் டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையாரும் [illegible] விளக்கவுரைகளுடன் [illegible] "சாதன சதுட்டயம்" என்ற பெயருடன் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்நூல் இல்லற வாழ்க்கையிலிருந்து கொண்டே [illegible] வேண்டிய முறையைக் காட்டுவதோடு [illegible] விசார சாகரமாயு மிருக்கின்றது.

கிரௌன் பக்கம் 520 : 29 அத்தியாயம்; உயர்ந்த காகிதம். விலை ரூபா 3

திவ்ய ஞான தீபம்

இது பாழ்வெளி - வினைமுறை - தேவர்கள் - மனித ஜனசமூகம் - கர்மநீதி - மரணத்திற்குப்பின் - மார்க்கம் - தியானம் - ஞானசாதனம் - சிவன் முத்தர்கள் - குருநாதனைச் சாரும் வழி - [illegible] - ஞானமூர்த்திகள் - [illegible] முதலிய பொருள்களைப் பற்றி எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட நூல். 350 - பக்கங்கள் கொண்டது. நல்ல வெள்ளைக் காகிதத்தில் அச்சிடப்பட்டது. விலை ரூபா 3.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

Edited & Published by T. V. Kalyanasundaran ; Printed by T. V. Velaganathan at the Sadhu Press, 19, Ganapathi Mudali Street, Royapettah, Madras.